Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-08 | 24-09-2005 | சனிக்கிழமை | ஓசை-219


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12761)

## தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக பிரதேச ரீதியாக அடையாள உண்ணா விரதங்கள்

தியாகி லெப்.கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு கூரல் நிகழ்வுகளில் இன்று முதல் மூன்று நாட்களுக்கு பிரதேசங்களின் முக்கிய இடங்களில் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இன்று காலை 8.00 மணி முதல் நடைபெறவுள்ள உண்ணாவிரத நிகழ்வுகளில் சங்கங்கள், கழகங்கள், பொது நிறுவனங்கள், மாணவர்கள் உட்பட பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்கவுள்ளனர்.

இதன்கென முக்கிய இடங்களில் பந்தல்கள் அமைக்கப்பட்டு தியாகி லெப்.கேணல் திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஒலிபெருக்கிகள் மூலம் தியாகி திலீபனின் சகத்தை எடுத்துக் கூறும் பாடல்களும் எழுச்சிப் பாடல்களும் இசைக்கப்படுகின்றன.

இறுதி நாளான வரும் திங்கட்கிழமை காலை 10.48 மணிக்கு மணி ஒலிக்கச் செய்துஎழுந்துநின்று அக வணக்கம் செலுத்தப்பட்டு தொடர்ந்து அடையாள உண்ணா விரதம் நடைபெறும். அன்று மாலை 7.00 மணிக்கு பிரதேச ரீதியாக மாபெரும் நினைவுப் பொதுக் கூட்டம் நடைபெறும்.

## சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவ முடியவில்லை



### ஐ. நா சிறப்புத் தூதுவர் பில் கிளிங்டன் கவலை

(லண்டன்)

சிறிலங்காவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவி சிறிலங்கா அரசால் விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாமையினால் கிடைக்கவில்லையென சுனாமி நிவாரணத்திற்கான ஐ.நா தூதுவராக இருக்கும் அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி கிளிங்டன் கூறியுள்ளார்.லண்டன் பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியிலேயே கிளிங்டன் இவ்வாறு கூறினார்.சிறிலங்கா உயர் நீதிமன்றம் கடந்த யூலை மாதம் இந்த ஒப்பந்தத்தை இடை நிறுத்துமாறு பிறப்பித்த உத்தரவு கவலைக்குரிய ஒரு விடயம் எனவும் அவர் கூறினார்.

# முகமாலையில் பல்கலை மாணவன் கைது; படையினர்-மாணவர்கள் கடும் முறுகல்

## மாணவர்களின் தீவிர செயற்பாட்டால் மாணவன் மீட்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

*யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஒருவரை முகமாலை சோதனைச் சாவடிப்பகுதியில் வைத்து இராணுவத்தினர் கைது செய்யமுற்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினருக்கும்-பல்கலைக்கழக மாணவர்களுக்குமிடையே முகமாலை இராணுவச் சோதனைச் சாவடிப்பகுதியில் பெரும் முறுகல்நிலை ஏற்பட்டது.*

நேற்று முற்பகல் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

வன்னிப்பகுதியில் இருந்து முகமாலைச் சோதனைச்சாவடியூடாக யாழ்ப்பாணத்துக்கு வந்து கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய உறுப்பினர்களுள் ஒருவரை சந்தேகத்தின் பெயரில் கைது செய்த படையினர் அவரிடம் வற்புறுத்தலாக வாக்குமூலம் ஒன்றையும் பெற்றுக்கொண்டனர்.

இதனைக் கண்டு ஆத்திரமடைந்த ஏனைய மாணவர்களும் அங்கு நின்றமக்களும் கைது செய்தமாணவனை விடுவிக்கக்கோரி இராணுவத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இது இவ்வாறிருக்க, மேற்படி சம்பவம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொங்குதமிழ் எழுச்சிவாரம் இன்றுமுதல் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாடெங்கும் இன்று தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதி "பொங்குதமிழ் எழுச்சிவாரமாகப்" பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இப் "பொங்குதமிழ் எழுச்சி வாரப்" பிரகடனம் பற்றிய அறிவிப்பை யாழ்- பல்கலைக் கழக மாணவர் சமூகம் விடுத்துள்ளது.

இதனடிப்படையில் யாழ்.குடாநாட்டில் உள்ள முக்கிய சந்திகள், வீதிகள் மற்றும் பொது இடங்கள் யாவும் சிவப்பு, மஞ்சள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவன் தடுத்துவைப்பு அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல்

### பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவனை விசமத்தனமாக தடுத்து வைத்து வன்முறைகளைத் தூண்டுவதற்கு சிறிலங்காப் படையினர் முயற்சிசெய்துள்ளனர். இது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அப்பட்டமாகவே மீறும் ஓர் செயலாகும்.

இவ்வாறு குற்றம்சாட்டியுள்ள தமிழ்- கூட்டமைப்பின் யாழ்-மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் இராணுவத்தினரது செயலுக்குத் தமது கடுமையான கண்டனத்தையும் தெரிவித்தார்.

வன்னிசென்றுவிட்டு யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்த மாணவனை விசமத்தனமாகத் தடுத்துவிட்டு,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கை அரசியலும் சிங்கள தீவிரவாதமும் யுத்தத்தை தூண்டும் வகையில் செயற்படுகின்றன

### லண்டன் "தமிழ் கார்டியன்" கருத்து

தென்னிலங்கையின் அரசியல் நிகழ்வுகளும் சிங்களத் தீவிரவாதிகளும் யுத்தத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டுவருவதாக லண்டனிலிருந்து வெளியாகும் 'தமிழ் கார்டியன் தலையங்கம் தெரிவித்துள்ளது.

'தமிழ் கார்டியன்' தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையின் வன்முறைகள் குறித்த சர்வதேச சமூகத்தின் உணர்வுகள் புரிந்துகொள்ளத்தக்கதே. தமிழ் துணைப்படை ஆயுதக் குழுக்களைக் களைந்து யுத்தநிறுத்தத்தைச் செயற்படுத்த வேண்டும் என்றுஇணைத் தலைமை நாடுகள் வலியுறுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைத் தொடரச் செய்வதற்காக முக்கியமான வலியுறுத்தல் (12ஆம்பக்கம் பார்க்க)

## சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி அதிகாரத்துடன் தமிழர்கள் வாழ சர்வதேசம் உதவ வேண்டும்

### யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் வேண்டுகோள்

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையோடும், தன்னாட்சி அதிகாரத்தோடு வாழும் உரிமையை பெற்றுத்தர சர்வதேச சமூகம் இனியும் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் மக்களின் சார்பில் பகிரங்கமாக வேண்டுகோள் விடுப்பதாக யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 30 ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

போர் நிறுத்தத்திலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும், நம்பிக்கை கொண்டவர்களாக தமிழ் மக்கள் நீண்ட காலம் காத்திருந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்த எதுவுமே நடைபெறாமல் காலம் வேகமாக நகர்ந்து கொண்டே இருக்கின்றது.

சுனாமி அழிவிற்கான பொதுக்கட்டமைப்பையும் அரசு கைவிட்டது. இந்த நிலையில் அரசு எப்படி தமிழ் மக்களின் நீண்ட கால பிரச்சினையை தீர்த்து வைக்க முடியும்?

தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை சிறிலங்கா அரசிற்கும்

(12ஆம்பக்கம் பார்க்க)

## சனாதிபதி நாடு திரும்ப பின்னரும் அரசியலிலும் திடீர் மாற்றங்கள்!

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாடு திரும்பியவுடன் அரசியலில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு மாறாகப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அடிப்படைவாதக் கட்சிகளுடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரிவித்து வரும் சனாதிபதி, பிரதமரின் முக்கிய பிரச்சாரக் கூட்டங்களைத் தவிர்க்கவும் அண்மைய நாட்களில் பிரதமர் எடுத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

எமது போராட்டப்பாதை அமைதி தழுவியதாகவோ அல்லது இரத்தம் தோய்ந்ததாகவோ அமைய வேண்டுமெனத் தீர்மானிக்க வேண்டியவர்கள் இங்குள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களே.

— தியாகி லெப்.கேணல் திலீபன்




யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30
செந்நீர்கள் மீதும் கண்ணீர்கள் மீதும் நடந்து, தமிழீழம் கடந்த 50 ஆண்டுகளாய் சுதந்திர உரிமை கோரி தமிழீழ மக்கள் நிற்கின்றோம். துவக்குகள் மட்டுமே ஓய்வு கொள்ளும், ஒரு கொடிய சூழலாய் சமாதானத் தேரின் சக்கரம் நகர்கின்றது. நகர்ந்து கொண்டிருக்கும் சமாதானத் தேரின் சக்கரங்களுக்குள் தொடர்ந்தும் தமிழ் மக்களின் உரிமைகள் நசுக்கப்பட்டு வருகின்றன.
பொங்குதமிழ் - 2005 எழுச்சி நிகழ்வு
போரும் இன்றி நிரந்தர அமைதியும் இன்றி தமிழ் மக்களாகிய நாம், முடக்கப்பட்டு இருக்கின்றோம். நிரந்தரத் தீர்வை, சர்வதேசமே வழங்கி தமிழீழ தனியரசை அங்கீகரி, இல்லை எனில் மக்களாகி நாம் சமராடி எம் உரிமைகளை மீட்டெடுக்க வழிவிடு.
உண்மைகள் உறங்குவதும் இல்லை.
உரிமைகள் தூங்குவதும் இல்லை.
மக்களே போராளிகளாய் புறப்படுங்கள்.
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்,
தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.
(ச-12301)


தமிழ்தேசியப் பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும்
மன்னார் மக்களின் மாபெரும் எழுச்சி நாள்
எழுந்த தமிழினம்
எல்லையைக் கண்டிட
நெருப்பு நெஞ்சுடன்
நிமிர்ந்து நிற்கிறது
மாயப் போர்வைக்குள்
மறைகின்ற சமாதானம்-எம்
தாகம் தீர்க்காது
வேகம் கொண்டு
விடுதலைக்காய் விரைவோம்.
சர்வதேசத்திடம் ஒருமித்த குரல்கொடுப்போம்
காலம்-28-09-2005
இடம்-பொதுவிளையாட்டு மைதானம் மன்னார்.
நேரம்-பி.ப.3.00 மணி
* தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டுக்குழு -மன்னார்
* தேசிய எழுச்சி பேரவை-மன்னார்.
* அன்னையர் முன்னணி மன்னார்.
* மாணவர் ஒன்றியம்-மன்னார்.

# சூறாவளி ரீற்றாவின் வேகம் 265-கி.மீ

# அமெ.வில் 20 இலட்சம் பேர் இடம்பெயர்வு



"ரீற்றா" புயலால் இடம் பெயரும் மக்களை ஏற்றிச் செல்லக் காத்திருக்கும் வாகனங்கள்.

(வோஷிங்டன்)

**ரீற்றா சூறாவளி தொடர்ந்தும் அபாய நிலையைத் தோற்றி விக்கத் தக்க நிலையிலேயே இருப்பதாகவும், மணிக்கு 265 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுவதாகவும் தெரிவிக்கப்படும் அதே வேளை அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் இருந்து 20 இலட்சம் பேர் வரையில் இடம் பெயர்ந்து வருகின்றனர்.**

அமெரிக்காவில் மூன்று மாநிலங்களை கடந்த மாதம் 29 ஆம் திகதி தாக்கிய கற்றினா சூறாவளி பேரழிவை ஏற்படுத்தியதுடன் பெருத்த உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்தியது. தற்போது 'ரீற்றா'சூறாவளி வலுவடைந்து அபாய நிலையை எட்டியுள்ளது இந்தப் சூறாவளி தற்போது மெக் சிக்கோ வளைகுடாப் பகுதியில் மையம் கொண்டுள்ளது. இன்று அது டெக்சாஸ் கடற்பகுதியைத் தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றினா தாக்கிய லூசியானா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் டெக்சாசில் தான் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இன்று கரையைக் கடக்கும் போது சூறாவளி அங்கிருந்தும் மக்களை விரட்டுமோ என்ற அச்சம் நிலவுகிறது. தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கல்வெஸ்டான் நகரை விட்டு வெளியேறுமாறு எச்சரிக்கப் பட்டுள்ளனர். மக்கள் உல்வெஸ் டான் நகரை விட்டும் வெளியேறிள்ளனர். இந்த நகரை 1900ஆம் ஆண்டு ஒரு சூறாவளி தாக்கிய போது அதில் பத்தாயிரம் பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் இராணுவத்தால் 10 தீவிரவாதிகள் கைது

பாகிஸ்தான் இராணுவம் மிசார் மடக்கல் பகுதியில் நடத்திய சோதனையின் போதுபத்துத் தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர். தட்டா கல் பகுதியில் நடந்த சோதனையின் போது விமான எதிர்ப்புப் பீரங்கி உட்பட பல்வேறு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இங்கு எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்தப் பிரதேசத்தில் மட்டும் 80 ஆயிரம் துருப்புக்களை பாகிஸ்தான் நிறுத்திவைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனியில் போக்குவரத்தை நிலைகுலையச்செய்த பாம்புகள்

ஜேர்மனியில் போக்குவரத்தை பாம்புகள் நிலைகுலையச் செய்துள்ளன. நச்சுப்பாம்புகளை ஏற்றிக்கொண்டு சென்ற வாகனம் ஒன்று டில்லன்பர்க் என்ற இடத்தில் கவிழ்ந்தது.இதனால் அதில் இருந்த பாம்புகள் வெளியேறி பாதையில் ஊர்ந்து செல்லத்தொடங்கின.இதைத்தொடர்ந்து அந்தப் பாதை மூடப்பட்டது. வாகனத்தில் இருந்து தப்பித்து ஓடிய பாம்புகளை ஊழியர்கள் பிடித்த பின்பே அந்த வீதி மீண்டும் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டது.



அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்ட ஏர்பஸ் விமானத்தின் முன் பகுதியிலிருந்து நெருப்பும் புகையும் வெளியாகிறது.

# பாகிஸ்தானில் இரு குண்டுவெடிப்புகள்; ஆறுபேர் பலி; 40 பேர் படுகாயம்!

(லாகூர்)



பாகிஸ்தான் லாகூர் நகரில் ஒரு மணி நேரத்திற்குள் நடந்த இரு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் ஆறு பேர் பலியாகினர், 40 பேர் படுகாயமடைந்தனர். பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென அஞ்சப்படுகிறது.

அமெரிக்காவின் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு பாகிஸ்தான் ஆதரவு அளித்து வருகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீவிரவாத அமைப்புகள் அவ்வப்போது பாகிஸ்தானில் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் லாகூரில் உள்ள மினார் பாகிஸ்தான் நினைவுச் சின்னம் அருகே நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டியில் மறைத்து வைக்கப் பட்டிருந்த குண்டு வெடித்ததில் வியாபாரிகள் இருவர் கொல்லப்பட்டனர்.

அருகில் உள்ள பேருந்து நிலையத்தில் நின்றவர்களில் எட்டுப்பேர் காயமடைந்தனர் இந்தச் சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்திற்குள் லாகூரில் மத்திய பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள வர்த்தகப் பகுதியில் மற்றொரு குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதில் அப்பாவிப் பொதுமக்கள் நான்கு பேர் பலியாகினர். 32பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென அதிகாரிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் ஷேக் ரஷீத் அகமது, குண்டுவெடிப்புச்சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். குண்டு வெடிப்புக்கு காரணமானவர்கள் 'பாகிஸ்தானின் எதிரிகள்" என்றும் தெரிவித்துள்ளார்.

குண்டு வெப்புச் சம்பவத்திற்கு இதுவரை எந்தவொரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. குண்டுவெப்பு நடத்தியதற்கான காரணமும் தெரியவில்லை என மூத்த பொலிஸ் அதிகாரி அமீர்ஜுல்பிகர் கூறியுள்ளார்.

## சிறையை உடைத்தமைக்கு இங்கிலாந்து மன்னிப்புக் கோர வேண்டும்--ஈராக்

சிறையை உடைந்து இரண்டு இராணுவ வீரர்களை இங்கிலாந்து விடுவித்ததற்கு அந்த நாடு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று ஈராக் கோரியுள்ளது. இது தொடர்பாக பஸ்ரா ஆளுநர் முகமது அல் வைலி நிருபர்களிடம் கூறியதாவது;

ஆளுநர் சபை நேற்று முன்தினம் கூடி இங்கிலாந்துக்கு ஒத்துழைப்பு கொடுப்பது இல்லை என்று தீர்மானித்தது. இங்கிலாந்துக்கு நாங்கள் மூன்று கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டால் மட்டுமே ஒத்துழைப்பு கொடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. நடந்த சம்பவத்துக்கு இங்கிலாந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். இது போல இனி நடக்காது என்று உறுதியளிக்க வேண்டும். ஏற்பட்ட சேதத்திற்கு இங்கிலாந்து இழப்பீடு தர வேண்டும் என்பது தான் அந்த மூன்று கோரிக்கைகள் ஆகும் எனத் தெரிவித்தார்.

## அமெரிக்க விமானத்தில் தீ விபத்து; விமானியின் சாதுரியத்தால் 146 பேர் தப்பினர்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் 146 பயணிகளுடன் புறப்பட்ட விமானத்தில் கோளாறு ஏற்பட்டது. அதனால் விமானத்தை விமானி அவசரமாக தரையிறக்கிய போதும் விமானத்தின் முன் சக்கரத்தில் தீப்பிடித்துக் கொண்டது. இருந்த போதிலும் விமானியின் சாதுரியத்தால் பயணிகள் பத்திரமாக கீழே இறங்கியுள்ளனர்.

அமெரிக்காவில் ஜெட் புளூ ஏர்லைனருக்குச் சொந்தமான விமானம் ஒன்று பர்பாங்க் என்ற இடத்தில் இருந்து நியூயோர்க் நகருக்குப் புறப்பட்டது.

விமானத்தின் முன் சக்கரம் 90 பாகை வளைந்து இருப்பதை விமானி கவனித்தார். இந்த நிலையில் தொடர்ந்து பறந்தால் ,தரை இறங்கும் போது பிரச்சினை ஏற்படும் என்று கருதினார்.அதனால் விமானத்தை லொஸ் ஏஞ்சல் நகரிலேயே தரையிறக்க முடிவு செய்தார்.

இதே நிலையில் விமானத்தை தரை இறக்கினால் விமானத்தில் தீப்பிடிக்கலாம் என விமானி அஞ்சினார்.அதனால் எரிபொருளை முடிப்பதற்காக மூன்று மணி நேரம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரை வட்டமிட்டு இறுதியாக விமானத்தை இறக்கினர்.ஆயினும் முன் சக்கரத்தில் தீப்பிடித்தது.

140 பயணிகளும் ஆறு விமானச் சிப்பந்திகளும் விமானத்தை விட்டு பத்திரமாக இறங்கினர்.விமானத்தில் தீப்பிடித்ததும், சக்கரத்தில் கோளாறு ஏற்பட்டதும் விமானத்துக்குள் இருந்த தொலைக் காட்சியில் ஒளிபரப்பட்டது. அதைப் பார்த்து நிலைமையை புரிந்து கொண்டதாக பயணிகள் கூறினர்.



சீனாவில் ஜினான் பகுதியில் வசிக்கும் கூழைக்கூத்தாடியின் எட்டு வயது மகள் இந்தச சிறுமி. இரண்டு வயதில் கயிற்றில் நடக்கும் வித்தையைய பழகத் தொடங்கிய இவர், 78 அடி உயரத்தில் கட்டப்பட்ட கயிற்றில் நேற்று முன்தினம் நடந்து சாகசம் செய்தார்.

## மெக்சிக்கோவில் வானூர்தி விபத்து; மந்திரி உட்பட 8பேர் பலி

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோ நாட்டில் உலங்குவானூர்தி ஒன்று விழுந்து நொறுங்கியதில் அந்த நாட்டு மந்திரி ஒருவர் உட்பட எட்டுப்பேர் பலியாகியுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

மெக்சிக்கோ நாட்டுபொதுப்பாதுகாப்பு மந்திரி ரமோன் மார்ட்டின் நேற்று முன்தினம் தன் உதவியாளர்களுடன் உலங்கு வானூர்தியில் லா பால்மா என்ற இடத்துக்கு புறப்பட்டார். போதை மருந்துக் கடத்தல் குற்றத்துக்காக கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் திருந்துவதற்கான முகாம் இங்குள்ளது.

தலைநகர் அருகே உள்ள மலைப்பகுதி மீது உலங்கு வானூர்தி பறந்தபோது அது கீழே விழுந்து நொறுங்கியது இதில் மந்திரி ரமோன் மார்ட்டின் பலியானார். விமானம் விழுந்து நொறுங்கிய ஆறு மணி நேரத்துக்குப்பிறகே மீட்புக்குழுவினர் விமானத்தின் உடைந்த பாகங்கள் விழுந்து கிடந்த இடத்தை கண்டுபிடித்தனர்.

## பாராளுமன்றக்கட்டடத்திற்குள் மழை; ருமேனியாவில் குடைபிடித்தபடி கூட்டம்

ருமேனியா நாட்டில் பாராளுமன்ற கூட்டம் நடைபெற்றபோது அங்கு மழைபெய்ததால் பாராளுமன்ற உறுப்பினர்கள் குடைபிடித்தபடி கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக தெரியவருகையில் ;

பாராளுமன்றக் கட்டடம் சமீபத்தில் தான் புதுப்பிக்கப்பட்டது நேற்று முன்தினம் மழை பெய்தபோது பாராளுமன்றக் கட்டடத்தின் கூரை ஒழுகத் தொடங்கியது. அப்போது சபை கூடி இருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதத்தில் ஈடுபட்டிருந்தனர். கூரையில் இருந்து மழைநீர் ஒழுகியதும் ,அவர்கள் இடம் மாறி இருந்தனர். குடை கொண்டு வந்திருந்த சிலர் அதை விரித்துப்பிடித்துக்கொண்டனர்.

இந்த நிலைக்காக சிலர் முன்னாள் சர்வாதிகாரி நிக்கோலஸை குற்றஞ்சாட்டினர். சிலர் பாராளுமன்றத்தை புதுப்பிக்க ஒப்பந்தம் செய்திருந்த நிறுவனத்தை குற்றஞ்சாட்டினர்.

30 மணிநேரம் மழை பெய்ததால் கழிவுநீர்க் குழாயால் சமாளிக்க முடியாமல் போய்விட்டது என்று ஒப்பந்தக்காரர்கள் கூறினர்.

இந்தக் கட்டடம் 1984 ஆம் ஆண்டு முதல் 1989ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 400 கட்டடக்கலைஞர்களால் 20 ஆயிரம் தொழிலாளர்களைக்கொண்டு கட்டப்பட்டது இதில் ,ஆறாயிரம் அறைகள் உள்ளன.

# தியாகி திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு போராளிகள் வட்டக்கச்சியில் சிரமதானம்

(வட்டக்கச்சி)

**வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறையின் ஒழுங்குபடுத்தலில் லெப். கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு வட்டக்கச்சி மத்திய மருந்தகத்தில் நேற்று முன்தினம் முதல் மூன்று நாட்கள் சிரமதானப்பணி நடைபெற்று வருகின்றது.**

இச்சிரமதானப் பணியில் சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணிப் போராளிகள், மகளிர் படையணிப் போராளிகள், அரசியல் துறைப்போராளிகள், வட்டக்கச்சி பிரதேச காவல் பணிமனையினர், கரைச்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பணியாளர்கள், கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவன பணியாளர் ஆகியோர் இணைந்து வட்டக்கச்சி மத்திய மருந்தக வளாகத்திலுள்ள மரங்கள், பற்றைகள் என்பனவற்றை வெட்டி சிரதானப் பணியை கடந்த மூன்று நாட்களாக மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சிரமதானப் பணியில் பெருமளவு போராளிகள் கலந்து கொண்டுள்ளனர். இதே போன்று சிரமதானப்பணி வட்டக்கச்சி பிரதேசத்தில் பல்வேறு பாகங்களிலும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (12)

# புளியங்குளம் பிரதேச மக்களுக்கு கிராமியப் படைக்கான பயிற்சி ஆரம்பம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா வடக்கு பிரதேசத்தில் கிராமியப் படைக்கான ஆரம்பப் பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன. புளியங்குளம் பிரதேச மக்களுக்கான ஆரம்ப பயிற்சி நிகழ்வு நேற்றுமுன்தினம் 4.00 மணிக்கு ஆரம்பமாகியது.

இக்கிராமியப் படைக்கான ஆரம்ப பயிற்சியின் போது ஆயுதப்பயிற்சி வழங்கப்படுகின்றது.கிராமியப் படையில் இணைந்து பயிற்சி பெற பலர் முன்வந்துள்ளனர்.இவர்களில் முதற்கட்டமாக ஆயிரம் பேருக்கு ஆயுதப்பயிற்சி அளிக்கப்படுகின்றது. (10)

# பொதுச்சந்தைக் கிணற்றில் குடிநீர் இல்லை மக்கள் பெரும் அவலம்

(மல்லாவி)

உருத்திரபுரம் பொதுச்சந்தைப் பகுதியில் அமைந்த பொதுக்கிணற்றில் குடிநீர் வற்றியதால் நீர் இன்றி வியாபாரிகள் மற்றும் சந்தைக்குவரும் மக்கள் பெரும் அவதிப்படுகின்றனர்.

மேற்படி பொதுச்சந்தைப் பகுதியில் அமைந்த இக்கிணற்றில் நீர் இன்றிக் காணப் படுகின்றது. இதனால் இச்சந்தை வியாபாரிகள் குடிநீர் பெறுவதற்கு நீண்ட தூரம் அலைந்து திரிகின்றனர். இது போன்று கனகபுரம், செல்வாநகர்ப் பகுதியெங்கும் இந் நிலை காணப் படுகின்றது.இதனால் சம்பந்தப்பட்ட அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர்.(24)

# சுவிசில் நடைபெற்ற தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் இருபதாவது ஆண்டு நிறைவு விழா

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் இருபதாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை சுவிசில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கேற்றல், வாழ்த்துப் பாடலுடன், இசை நிகழ்ச்சி, சிறப்புரைகள், நடனங்கள், கௌரவிப்புக்களும், வெளியீட்டு நிகழ்ச்சிகளும் இந்த விழாவில் இடம்பெற்றன. சிறப்பு விருந்தினர்களாக சந்துரு பரராசசிங்கம் மற்றும் யூலியாகியூம் ஆகியோர் இலங்கை தமிழர்புனர் வாழ்வுக் கழகத்திலிருந்து கலந்து கொண்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை தொடங்கியவர்களில் ஒருவரான டாக்டர் மூர்த்தி லண்டனிலிருந்து கலந்து சிறப்பித்தார். சிறிலங்காவில் மட்டக்களப்பில் புனரமைப்புப் பணிக்காக சென்று திரும்பிய சுவிஸ் நாட்டவரும், தமிழரும் சிறப்பிக்கப்பட்டதோடு சுவிஸ் நாட்டவர்கள் தங்கள் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

"புனர்வாழ்வு 20" என்ற ஒலிவட்டும், பொன் சுந்தரலிங்கத்தின் பாடல் தொகுப்பு அடங்கிய ஒலிவட்டும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 20 ஆவது ஆண்டு சிறப்பு மலரும் வெளியிடப்பட்டன. சங்கமம், அங்கயற்கண்ணி ஆகிய இசைக்குழுக்களின் இசையில் சுவிசிலுள்ள பாடகர்களும், கனடா பாடகர்களும் உணர்வுப் பாடல்களைப் பாடியுள்ளனர். கடந்த 20 ஆண்டுகளாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு கலைப் பணியாற்றிய கலைஞர்களும் சிறப்பிக்கப்பட்டனர். நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

# மத்திய மருந்தகத்திற்கு வைத்தியர் இன்மையால் சிகிச்சைகளின்றி மக்கள் விசனம்

(முல்லைத்தீவு)

செம்மலை அளம்பிலில் புதிதாக மத்திய மருந்தகம் ஆரம்பிக்கப்பட்ட போதும் இதுவரை சிகிச்சைகள் எதுவும் அவ் வைத்தியசாலையில் நடைபெறவில்லையென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிக்கான வைத்தியர் இல்லாமையே இதற்குக் காரணம் எனவும் முல்லை. மாவட்ட வைத்திஅதிகாரி தர்மேந்திரா தெரிவித்துள்ளார். (20)

# தியாகி திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும் கண்மணி மாதிரி முன்பள்ளி இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும்

(ஒட்டுசுட்டான்)

தீலிபனின் 18 ஆவது ஆண்டு நினைவு கூரலும் கண்மணி மாதிரி முன்பள்ளியின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும் கடந்த 17ஆம் திகதி அன்று சேனைப்பிலவு கிராமத்தில் நெடுங்கேணி அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சி.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச் சுடரினை வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவிப் பணிப்பாளர் காந்தன் ஏற்ற, தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் ஏற்றியதைத் தொடர்ந்து திலீபனின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரேற்றி மலர் வணக்கம் நடைபெற்றது.

சிறார்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றதைத் தொடர்ந்து கருத்துரைகளை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர், முல்லை.மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் அணியழகன் ஆகியோர் வழங்கினர். (05)

# தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் வன்னிப் பணிமனை திறப்பு விழா

பரந்தன் நகர்ப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட தனியார் பேருந்து உரிமையாளர் கழக வன்னிப்பணிமனைத் திறப்புவிழா கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கழகத்தலைவர் த.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பொதுச்சுடரை கிளி.மாவட்ட அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் அருள் ஏற்றிவைத்தார். மங்கல விளக்கை தனியார் பேருந்துக் கழக முன்னாள் தலைவர் சி.சுரேந்திரன், கழகப்பொருளாளர் இ.ஜெயவீரசிங்கம் ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசியக்கொடியை பரந்தன் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் வின்சன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பணிமனை மண்டபத்தின் நாடாவை த.போ.க நிர்வாக அலுவலர் சி.சிவசோதி வெட்டித் திறந்து வைத்தார். பணிமனைப் பெயர்ப்பலகையை த.போ.க நிதி ஆளுகைப்பகுதிப் பொறுப்பாளர் பொ.மலைமாறன் திரைநீக்கம் செய்து வைத்தார். வரவேற்புரையைக் கழக உபதலைவர் சந்திரபாலன் நிகழ்த்தினார். சிறப்புரையை கிளி.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர், த.போ.க. உசாவல் பகுதி முகாமையாளர் அ.பெர்ணாண்டோ ஆகியோர் நிகழ்த்தினர். (14)

# இளங்கோபுரம் சோழர் சிறுவர் பூங்காவின் 12ஆம் வருட சிறுவர் கலை விழா

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணி நிர்வகிக்கும் விசுவமடு இளங்கோபுரம் சோழர் சிறுவர் பூங்காவில் சிறுவர் கலைவிழா-2005 நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.00 மணிக்கு சிறுவர் பூங்கா நிர்வாகி திருமதி. இசைஞானவதி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கை தமிழீழ அரசியல்துறைதுணைப் பொறுப்பாள் சோ.தங்கன் ஏற்றிவைக்க, தமிழீழ மாவீரர், போராளிகள் குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் ஆசியுரையை வழங்கி நிகழ்வுகளை ஆரம்பித்துவைத்தார். தலைமை உரையை நிர்வாகி திருமதி இசைஞானவதி, வரவேற்புரையை திருமதி. செல்வராணி நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சிறார்களின் வரவேற்பு நடனம், அஞ்சலி நடனம், கரகம், காவடி,தாளலயம், வினாடிவினா, நாடகம் எனப் பல நிகழ்வுகளை வழங்கி 12ஆம் வருடகலை விழாவைச் சிறப்பித்தனர். ஆசிரியர்கள் சார்பில் சி.மகேஸ்வரி உரைநிகழ்த்தினார். கலைவிழா நிகழ்ச்சிகள் தொடர்பாக ஆய்வுரையை பூங்காக்களின் இணைப்பாளர் அ.சிறீகுமார் வழங்கினார். சிறப்புரை[illegible] தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்தினார். நிகழ்வில் பெற்றோர், [illegible] விரும்பிகள் எனப் பெருமள[illegible] கலந்து சிறப்பித்தனர்.

## திருத்தம்

கடந்த திங்கட்கிழமை (19.9.2005) வட்டக்கச்சிப்பிரதேச விவசாயிகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் விவசாய உள்ளீடுகள் வழங்கியது.இதன் போது தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு ரூபா 10,000 பெறுமதியான உள்ளீடுகள் வழங்கப்பட்டதாக ச.தே.சங்கம் தெரிவிக்கின்றது.

இவ் உள்ளீடுகள் அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிகராலயம் வழங்கியதாகவும் ரூபா 7500 பெறுமதியான உள்ளீடுகள் வழங்கப்பட்டதாகவும் 21ஆம் திகதி நாழிதழில் [illegible]யான தகவல் தவறானதாகும்.

# அமெ.தொண்டர் அமைப்பு உதவியுடன் கல்லடி மீனவருக்கு த.பு.க.உபகரணங்கள் வழங்கல்!

(திருகோணமலை)

வெருகல்-ஈச்சிலம்பற்றுப் பிரதேசச் செயலர் பிரிவில் கல்லடிக் கிராமத்தில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 70 மீன்பிடிப் படகுகள், 70 வெளியிணைப்பு இயந்திரங்கள், 70 மீன்பிடி வலைகள் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டன.

ஒரு தொகுதியின் பெறுமதி மூன்று இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. ஒப்பரேஷன் யு.எஸ்.ஏ என்ற அமெரிக்கத் தன்னார்வ அமைப்பு வழங்கிய நிதியுதவியுடன் திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

இரு மீனவர்களுக்கு என்று ஒரு படகுவீதம் கையளிக்கப்பட்டது. 140 பயனாளிகள் இப்படகுகளைப் பொறுப் பேற்றனர். இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன், திருமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் விஜயகுமார், பிரதிப் பணிப்பாளர் சி.குமரகுருபரன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யு.எஸ்.ஏ ஒப்பரேசன் அமைப்பிற்கான ஒருங்கிணைப்பாளர் அர்ஜீன் எதிர்வீரசிங்கம், கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் வைகை, மீனவ சமாசத் தலைவர் ஜெயகுமார் ஆகியோருட்பட பலர் நிகழ்வில் பங்குபற்றினர்.

நிகழ்வில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் கருத்துரைக்கையில்; தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 1983இல் ஆரம்பிக்கப்பட்டது. இன்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு உதவிகளை வழங்கி வருவதாகக் குறிப்பிட்டார். தென்னிலங்கையில் ஏற்படப் போகும் ஆட்சி மாற்றம் தமிழ் மக்களுக்குப் புதியதல்ல. இம்மாற்றம் தமிழ்மக்களுக்குப் புதிதாக ஒன்றையும் தரப்போவதில்லை. இது கடந்தகால வரலாறு. மாறாகப் புதிய நெருக்கடிகளையே சந்தித்துக் கொண்டிருக்கின்றோம் என்றும் செம்மணன் தெரிவித்தார். (25)




தியாகி லெப்.கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் பாடசாலை மாணவர்களுடன் இணைந்து மாங்குளம் காவல்பணிமனையினர் மரம்நாட்டுவதை முதலாவது படத்திலும், துணுக்காய் காவல்பணிமனையினர் மரம் நாட்டுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# நாட்டிற்கு தேவையான 98 வீத அலகுகள் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் உள்ளன

## மட்டக்களப்பு அரசியல் துறைப் பொறுப்பாளர்



**ஒரு நாட்டிற்குத் தேவையான 98 வீதமான அலகுகள் எம்மிடம் உள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.**

லண்டன் ஐ.பி.சி சுவிஸ் கலையகத்திற்கு கடந்த புதன் கிழமை இளந்திரையன் அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள் ளார்.அதில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி களும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

☐ மட்டக்களப்பு மாவட்ட சமகால சூழல் எப்படி உள்ளது?

இங்கு ஒரு இறுக்கமான சூழ்நிலை நிலவி வருகிறது. எங்களுடைய தாயகக் கோட்பாட்டைச் சிதைப்பதற்கான பேரினவாதச் சக்திகளின் கையாட்கள் குறிப்பாக படையின ருடைய புலனாய்வுத்துறை ஆட்கள் மிக மோசமான யுத்த நிறுத்த மீறல்களையும், விடுதலை உணர்வு கொண்டவர்களையும் விடுதலைப் பாதையில் பயணிப்பவர்களையும் துன்புறுத்துகிற- அச்சுறுத்துகிற செயல்களை செய்து வருகின்றனர்.

இதனால் இங்கு சிக்கலான நிலை இருக்கி றது. ஆனால் இந்த இன்னல்களுக்கு இடையே யும் இங்கே நடைபெறுகிற- பேரணிகளில் எழுச்சி நிகழ்வுகளில் பங்கேற்று தங்களது உணர்வுகளை அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்றனர்.

எங்களுடைய தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் மீது தாங்கள் வைத்திருக்கிற பற்றுறுதியையும் நம்பிக்கையையும் மிக ஆணித்தரமாகச் சொல்லி வருகிறார்கள்.

அண்மைய திலீபன் நினைவு நாள் நிகழ்வு களில் கூட மக்கள் பெருமளவில் பங்கேற்று தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தி வருகின்ற னர். தமிழர்களுக்கு விடுதலைப் போராட்டத்தின் தேவை இருக்கிறது என்பதையும் சர்வதேச சமூகத்திடம் எடுத்துச் சொல்லுகிற நிகழ்வு களிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி வருகிறார்கள்.

☐ மட்டக்களப்பு பேரெழுச்சி நிகழ்வில் தமிழீழ தாயகத்தின் இறுதிக்கட்டத்தை நிறுவுவதற்கான காலத்தில் இருப்பதாக உரையாற்றி இருந்தீர்கள்? இதனுடைய கருத்து எத்தகையது?

படைக்கட்டுமானங்கள் மட்டுமே முன்பு இருந்தன. இப்போது அரசியல் ரீதியான கட்டுமானங்கள்,நிர்வாகக் கட்டுமானங்கள், சேவைக் கட்டுமானங்கள் என்று ஒரு நாட்டிற் குத்தேவையான கட்டுமானங்கள் அத்தனையும் இப்போது உள்ளன.

ஒருநாடு தன் இறைமையையும் தனித்தன்மை யையும் வெளிப்படுத்துகிற வகையில் தாம் ஒரு நாடாக இருப்பதைக் காட்டக்கூடிய 98 சதவீதமான அலகுகளை நாம் இப்போது பெற்றிருக்கிறோம்.அவை நடைமுறையில் இருக்கின்றன.

நாம் இப்போது செய்ய வேண்டிய வேலை தமிழீழத்துக்கான பணத்தை அச்சடிக்க வேண்டியது மட்டும் தான்.சேவை நிறுவனங் கள், திணைக்களங்கள் எல்லாம் இப்போது எமது நிர்வாகப் பிரதேசத்தில் இயங்கி வருகின்றன. இவற்றை தமிழர் தாயகத்தின் இதரப் பகுதிகளிலும் செயற்படுத்த வேண் டியது மட்டும்தான் தேவை.

நீங்கள் குறிப்பிட்ட அந்தப் பேரெழுச்சி நிகழ்வில் இராணுவம் சுற்றி வளைத்து நின்ற போதும் மக்கள் கைகளை உயர்த்தி உரத்த குரல் எழுப்பிச் சொன்னார்கள்.... எங்களுடைய தலைவன் பிரபாகரனே! எங்களுடைய தேசம் தமிழீழமே என்று.

அந்தச் சுற்றி வளைப்புக்குள்ளும் மக்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த இயலுகிற போது மீண்டும் சிங்கள இனவாதம் மீண்டும் எங்கள் மீது யுத்தத்தைத் திணிக்குமானால் அது ஒரு இறுதி யுத்தமாக- முடிவைச் சொல்லுகிற யுத்தமாக இருக்கும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்த சிங்கள, முஸ்லிம் மக்களின் புரிதல் எத்தகையதாக இருக்கிறது?

அண்மையில் ஒரு பௌத்த பிக்குவைச் சந்தித்துப்பேசிக்கொண்டிருந்தோம்.தென்னிலங் கையிலுள்ள மக்கள் இந்த தேர்தலிலாவது ஐந்தே ஐந்து வருடம் பிரபாகரனிடம் நாட்டை ஒப்படையுங்கள்.அவர் முன்னேற்றிக் காட்டுவார் என்கிற அளவில் பேசிக்கொள்கிறார்களாம்.கீழ் நிலையில் உள்ள சிங்கள முஸ்லிம்கள்- தமிழர் களது உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள்.

இப்பகுதியிலுள்ள தமிழ்பேசும் அனைத்து மக்களும் சிங்கள மக்களும் தமிழ் மக்களின் விடுதலைக்கான விடயங்களை புரிந்து வைத்தி ருக்கிறார்கள்.

தியாக தீபம் திலீபன் பற்றிய உங்களது பார்வை?

திலீபன் அவர்களுடைய தியாகத்தோடு மக்கள் தங்களை அடையாளப் படுத்திக்கொண்டு அந்த தியாகியினுடைய வரலாற்றை நினைவு கூருதலும் - அவருடைய உணர்வெழுச் சிகளை தங்களுடைய மனங்களிலே ஏற்றுக் கொண்டு எழுச்சிபூர்வமாக காணப்படுகிற நிகழ்வானது சர்வதேச சமூகத்திற்கு ஒரு விடயத்தைச் சொல்லுகிறது.

தன் உடலை உருக்கி தன் உயிரை அர்ப்பணித்து தாயக விடுதலைக்கான தன் பங்களிப்பைச் செய்துள்ளார்.

இந்தத் தியாகமானது நாங்கள் தியாகத்தின் எந்த விளிம்பிற்குச் சென்றாவது விடுதலை யைப் பெற்றே தீருவோம் என்று அன்று திலீபன் சொன்னதை அவரது உணர்வுடன் இணைந்து நிற்கும் மக்கள் வழி மொழிகிறார்கள்.இதை சர்வதேச சமூகம் உற்றுக்கேட்க வேண்டும். எண்ணிப் பார்க்கவேண்டும்.

# தமிழர்களது இறுதி நிலையை வெளிப்படுத்த பொங்கு தமிழுக்கு அணிதிரண்டுவாரீர்!



### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறை கூவல்

யாழ். பொங்கு தமிழ் நிகழ்வில் அனைத்து தமிழ் மக்களும் கலந்து கொண்டு தமிழர்கள் இறுதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்ட அலை அலையாக அணி திரளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறை கூவல் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர்வெளியிட்ட அறிக்கை யில்;

தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அவர் களின் அடிப்படை உரிமைகளை ஏறி மிதித்து தாயகத்தை சிதைக்கவும் அவர்களுக்குரிய தன்னாட்சி உரிமையை நிராகரிக்கவும் சிங்கள பௌத்த பேரினவாதம் தனது பேய்க்கூச்சலை தென்னிலங்கையில் மீண்டும் உரக்க ஒலிப்பது எமக்கு நன்றாகவே கேட்கின்றது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலைக்கு தென்னிலங்கை அரசியல் சூழ்நிலை சென்றுள்ளது. இந்த சிங்கள பௌத்த பேரினவாதம் அவ்வப்போது எழும்பி ஆடிய ஆட்டங்களால் தமிழர் தாயகத்திலும் தமிழர் தம் நெஞ்சங்களிலும் பல மாறாத காயங்கள் ஏற்பட்டன.

ஆனால் தற்போது எழுந்து ஆர்ப்பரிக்கும் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழர் தாயகத்தை கூறுபோட்டு தமிழர்களின் இதயத்தையே பிளந்து விடும் மூர்க்க நிலையை இறுதி வடிவமாக எடுத்துள்ளது.

இதன் மூலம் சனநாயக பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட வழி முறைகளி னூடாக தீர்வு ஒன்றை எட்டுவதற்கிருந்த சந்து பொந்துகளைக் கூட அடைத்து விட்டுப் பேரின வாதம் எக்காளமிடுவதை தமிழ் மக்களாகிய நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தோன்றியுள்ள பயங்கரவாத நிலையால் எழும் எமது நிலைகளை உணர்வலைகளை தமிழ் பேசும் மக்களாகிய நாம் சர்வதேச சமூகத்தின் முன் கொட்டி நியாயத்தைக் கேட்க வேண்டும்.

சிங்களப் பேரினவாதத்தின் மூர்க்கத்தினால் இறுதி முடிவு எடுக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை சர்வதேச சமூகத்தின் முன் எடுத்தியம்ப வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனினதும் கட்டாயக் கடமையாகும்.

எமது தாயகத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்வதற்கு எமக்கு இயற்கையாகவே இருக்கும் உரிமையை உலகம் அங்கீகரிக்க வேண்டும்.

எமது தாயகப் பகுதியில் ஆக்கிரமித்து நிற்கும் சிங்களப் படைகள் வெளியேற வேண்டும்.

வரலாற்று ரீதியாக எமது தாயகம் கொண்டிருந்த இறையாண்மையை மீண்டும் பெறுவதற்கும் எமது சுதந்திர வாழ்வை உறுதிப் படுத்தவும் உலகத்தைக் கோருவதற்கான எழுச்சி எமது தாயகப் பிரதேசமெங்கும் பொங்கி எழுந்ததை மனதில் கொண்டு யாழ். மாவட்டத்தில் இம் மாத இறுதியில் நடை பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் எல்லாத் தமிழ் மக்களும் கலந்துகொள்ள வேண்டுமெனக் கூவி அழைக்கின்றோம்.

தீர்க்கமான இறுதிக் கட்ட நிலையொன்றை எடுப்பதற்கு சிங்களப் பேரினவாதம் எம்மை நிர்ப்பந்தித்துள்ளது.

அவர்களுடன் நாங்கள் செய்த ஒப்பந்தங் களோ பல. அவை கிழிந்த கடிதாசித் துண்டு களாகி விட்டன. இறுதியாக இயற்கை பேரவலத் தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதா பிமான பணிகளுக்கான பொதுக்கட்டமைப்புக் கூட செல்லாக்காசாகி விட்டது.

இந்த அவலத்தையும் பேரினவாதம் செய்த அநியாயங்களையும் கவனத்தில் கொண்டு இறுதியான நிலையொன்றுக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை எடுத்துக் காட்டி எழுச்சிப் பிரகடனம் செய்ய அலை அலையாகத் திரண்டு வாருங்கள் எனப் பணிவன்போடு அழைக்கின்றேன். இது எமது தேசியக் கடமை என்று அதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

## படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதான வீதிகளை திறக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரப் பகுதிகளில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதான வீதிகளை திறந்து வைப்பதற்கு யாழ். அரச அதிபருடாகப் பேச்சுக்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக நகரப் பகுதியிலுள்ள பிரதான வீதிகளைத் திறந்து விடுமாறு படைத் தலைமைக்கு பலதரப்புக்களும் தொடர்ந்து அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றார்கள் என யாழ் மாநகர சபை ஆணையாளர் சீ.வீ கே சிவஞானம் தெரிவித்துள்ளார்.குறிப்பாக நகரப்பகுதியில் அமைந்துள்ள படைமுகாம்களின் பாதுகாப்பிற்கென படைத்தரப்பு ,பிரதான வீதிகளை ஆக்கிரமித்துள்ளதை ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை இதேவேளை யாழ் மாநகரசபை பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் விடயத்தில் அரச உதவிகள் ஏதும் தொடர்ந்தும் கிட்டாத நிலையே இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார் .(27)

## நீர் வசதி இல்லாமையால் வீடமைப்பு வேலைகள் தாமதம்

வீடமைப்பு வேலைகளை மேற்கொள் வதற்கு போதியளவு நீர் வசதி இன்மையால் கட்டட வேலைகளை விரைவாக செய்து முடிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. என கிராமவாசிகள் கவலை தெரிவிக் கின்றனர்.

இதற்கமைவாக புத்தூர் வாதரவத்தை கிராமத்தில் தற்போது பாதிக்கப்பட்ட வீடுகள் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் வீடமைப்புத் திட்டங்கள மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாதரவத்தை கிராமம் தாழ்நில பிரதேசமாக இருக்கின்றது. இனி மழைக் காலம் நெருங்கி விட்டது. மழைக்காலம் தொடங்கி விட்டால் தாழ் நிலப்பகுதிகளில் நீர் தேங்கி நிற்கும். அதனால் கட்டட வேலைகளை செய்து முடிக்க முடியாத நிலை வரும். இந்த நிலையில் [illegible] திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற [illegible] அளவை இந்தக் [illegible] அதிகளவ [illegible] கட்டட வேலைகளை செய்து முடிப்பதாக [illegible] இருந்[illegible] கிராம வாசிகள் [illegible] தெரிவித்தனர்.

# இடப்பெயர்வுகள் காரணமாகவே காசநோய்த் தாக்கம் அதிகரிப்பு

### - வைத்திய கலாநிதி யமுனானந்தன்

இராணுவநடவடிக்கை காரணமாக குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களிடையே காசநோயத் தாக்கம் ஏற்பட்டுள்ளது என வைத்திய கலாநிதி சி. யமுனாநந்தன் தெரிவித்துள்ளார்.

பண்ணைப்பகுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள காச நோய் சிகிச்சை நிலையத்தின் பொறுப் பதிகாரியாக பொறுப்பேற்றுள்ள அவர், ஊடகவியலாளர்களிடையே உரையாற்றுகையிலே இத்தகவலை வெளியிட்டார். 1985 ஆம் ஆண்டு யாழ் கோட்டையினை அண்டிய பகுதி களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக் கைகளால் காச நோய் சிகிச்சை நிலையம் முற்றாக அழிந்து போயி ருந்தது. எனினும் 20 வருட இடை வெளியின் பின் உலக வங்கியின் உதவியுடன் சொந்த இடத்தில்புதிய கட்டடத்தில் அது இயக்கி வைக்கப் பட்டுள்ளது.

இதேவேளை மயிலிட்டி பகுதியில் இயங்கி வந்த காச நோய் சிகிச்சை விடுதி உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக மூடப்பட்டுள்ளது. அது தற்காலிகமாக கோப்பாய் பகுதியில் இயங்கிவருகின்றபோதும் போதிய அடிப்படை வசதிகள் இன்றியே இருக்கின்றது. அறை விடுதியொன்றில் பத்திற்கும் மேற்பட்ட காச நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டிய நிலையில் உள்ளது என்றார். (27)

## நேர்முகத் தேர்வு

கிளிநொச்சி மாவட்டத் தில் சேவையாற்றும் சகல சுகாதார உதவியாளர்களுக்கும் (தொண்டர்களுக்கு) எதிர்வரும் 27ஆம் திகதியில் பிரதியாளண சுகாதார சேவைகள் பணிப் பாளர் பணிமனை யில் நேர்மு கத் தேர்வு நடைபெறுவதன் மூலம் இவர்கள் சிற்றூழியர் களாக நியமிக்கப்படவுள் ளனர்.இதுமுன்னர் 26,27 ஆகிய இருதினங்களிலும் நடைபெறும் என அறிவிக்கப் பட்டிருந்ததாகவும் இந்நேர்முகத் தேர்வு 27 ஆம் திகதி மட்டுமே நடை பெறும் எனவும் சுகாதார சேவைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# சைனஸ் நோயும் நவீன மருத்துவமும்

புருவத்துக்கு மேல் உள்ள நெற்றியில் உள்ள சைனஸ் மூக்குக்கு இரு புறமும் கன்னத்தில் உள்ள சைனஸ் மூக்குக்குள் உள்ள சைனஸ் மூக்குக்குப் பின்புறம் பிட்யூட்டரி சுரப்பிக்குக் கீழே உள்ள சைனஸ் என நான்கு சைனஸ் துவாரங்கள் நம் தலையில் உள்ளன.

இந்த நான்கு சைனஸ் துவாரங்களில் ஏதேனும் ஒன்றில் நீர் தேங்கினால் அப்பகுதியில் உள்ள சளிச்சவ்வு வீங்கிக்கொள்ளும் அதுதான் சைனஸ் நோய். சாதாரண சளியாக இருந்தால் கிருமி எதிர்ப்பு மருந்து கொடுத்தால் சரியாகிவிடும். ஆனால் சைனஸ் பிரச்சினை உள்ளவர்களுக்கு நீண்ட நாட்களுக்கு சளித்தொல்லை இருக்கும் தலைவலி தொடர்ந்து இருக்கும்.


மூக்கடைத்துக் கொண்டு மூச்சுவிட சிரமப்படுவார்கள் இதைக் கண்டுகொள்ளாமல் விட்டால் சைனஸ் துவாரங்களில் நீர் தேங்கி நாளடைவில் சீழ்கோர்த்து மூளை உள்ளிட்ட பல பிரச் சினைகளுக்குக் காரணமா கிவிடும் இதற்கு உடனே சிகிச்சை அளித்தாக வேண்டும்.

பழைய சிகிச்சை:- சைனஸில் தேங்கி உள்ள நீரை வெளியேற்ற பல ஆண்டுகளாக பஞ்சர் என்ற சிகிச்சை முறை பின்பற்றப்பட்டது. மூக்கு அருகே ஊசிபோட்டு அந்த நீரை உறிஞ்சி எடுப்பார்கள். இச் சிகிச்சையால் தற்காலிக நிவாரணமே பெறமுடியும் மேலும் இச்சிகிச்சையால் அனைத்து சைனஸ் துவாரங் களுக்கும் சிகிச்சை அளிக்க முடியாது. கண்களுக்குப்பின்புறம் நெற்றியில் உள்ள சைனஸில் பாதிப்பு ஏற்பட்டால் சிகிச்சை அளிப்பது மிகவும் சிக்கலாக இருக்கும். கண்கள் கபாலம் போன்ற முக்கிய துவாரங்கள் சேதப்பட்டு விடும் அபாயம் இருப்பதால் பஞ்சர் முறை மூலம் சிகிச்சை அளிக்க முடியாத நிலை.

இன்றைய அதிநவீன சிகிச்சைகள்:-

இந்த நான்கு சைனஸ் துவாரங்களில் எந்த துவாரத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும் அதை முற்றிலும் குணப்படுத்தியாக வேண்டும். அதற்கு உதவுவது தான எண்டோஸ்கோப்பி சிகிச்சை. கேமரா பொருத்தப்பட்ட இந்த அதிநவீன கருவிமூலம் வீடியோ திரையில் மூக்கின் அனைத்து பாகங்களையும் தெளிவாகப் பார்க்க முடியும். சைனஸ் துவாரங்களில் உள்ள சிறிய பாதிப்புகளையும் கூட மிகத் துல்லியமாகக் காணமுடியும் நோயின் தன்மையை அறிய நோயாளிகளுக்கு மயக்க மருந்து கொடுக்காமலேயே பரிசோதிக்க முடியும்.

சைனஸ் காரணமாக தொடர்ந்து அவதிப்படுவோர் எண்டோஸ் கோப்பி மூலம் அறுவைச் சிகிச்சை செய்து நீரை வெளியேற்றலாம். இந்த சிகிச்சையின் போது நோயாளி ஒரு நாள் மட்டும் மருத்துவமனையில் தங்கினால் போதும்சைனஸ் உறுப்பில் உள்ள நீர் முற்றிலும் வெளியேற்றப்படும். சிகிச்சை அளிக்கப்படும் பாகம் வீடியோ திரையில் நன்றாகத் தெரியும் மூக்கு துவாரத்தின் வழியாக நுண்ணிய கம்பி போன்ற கருவி மூலம் சிகிச்சை அளிக்கப்படுவதால் அதில் காயமோ தழும்புகளோ ஏதும் கிடையாது எண்டோஸ் கோப்பி மூலம் சிகிச்சை பெறுபவர்களுக்குப் பெரும்பாலும் மறுமுறை சைனஸ் பிரச்சினை வருவதி ல்லை. லேசர் கருவி உதவியுடன் எண்டோஸ் கோப்பி அறுவைச் சிகிச்சை செய்வது மேலும் வசதியானது. இதனால் இரத்தம் அதிகளவு வெளியேறுவது தடுக்கப்படுகிறது. பெரிய காயம் எதுவும் ஏற்படாது. புண்ணும் விரைவில் ஆறி விடும் அந்த வகையில் எண் டோஸ் கோப்பி ஒரு வரப்பிரசாதம்தான்.



ஜப்பான் தகாசிமயா திணைக்கள களஞ்சியத்தில் விற்பனைக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ரிம்சுக் றோபோ தயாரிப்பாளரின் "ரிம்சுக்-4" என்ற றோபோவைக் காண்கின்றீர்கள்.இது தொலைக்காட்சிப் படங்களை உரிமையாளரின் நடமாடும் தொலைபேசிகளிற்கு மாற்றக்கூடியது அத்துடன் தீவிபத்துக்களை அறிந்து அதை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடியது.

இதன் விலை 280.000 ஜென்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## 2000 ஆங்கிலச் சொற்களை புரிந்துகொள்ளும் மனிதக் குரங்கு

கலிபோர்னியாவில் பராமரிக்கப்பட்டு வரும் ஹொக்கோ என்ற மனிதக் குரங்கு தனக்கு பல்வலி ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் மருத்துவரின் தேவை பற்றி அறிவித்துள்ளது. சைகைமுறையில் தனது தேவையை வெளிப்படுத்திய இந்த குரங்கின் பல்லை மருத்துவர்கள் கழற்றியுள்ளனர். இந்த மனிதக் குரங்கு நுண்ணறிவு படைத்ததாகத் திகழ்கின்றது எனவும் ஆயிரம் சைகைகளை அறிந்து வைத்து மனிதருடன் தொடர்பாடி வருவதாகவும் ஆங்கில மொழியில் இரண்டாயிரம் வார்த்தைகளை புரிந்து கொள்ளும் சக்தியும் அதற்கு இருப்பதாக விலங்கியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.




டோக்கியோவில் மிக மெலிதான செல்போன் கருவியை என்.இ.சி நிறுவனம் நேற்று அறிமுகம் செய்தது. 11.9 மில்லி மீற்றர் தடிமனே உள்ள இதுதான் உலகின் மிக மெலிதான செல்போன் என்று அந் நிறுவனம் கூறுகின்றது.




மெதனோல் எரிபொருளை நேரடியாக செல்லாக பயன்படுத் தும் ஒலிப்பதிவுக்கருவியை ஜப்பானின் டோஷிபா நிறுவனம் உருவாக்கி உள்ளது. டோக்கியோவில் உள்ள டோஷிபா தலைமையகத்தில் மாதிரி ஒலிப்பதிவுக்கருவியை காண்பிக்கிறார் கம்பனி ஊழியர் ஒருவர்

## மொனாச் இன வண்ணத்துப்பூச்சி

உலகிலுள்ள வண்ணத்துப் பூச்சி இனங்களில் மொனாச் (Monarch) என்னும் வண்ணத்துப்பூச்சி இனம் விசேட அம்சத்தை கொண்டுள்ளது.

சில வண்ணத்துப் பூச்சிகள் இடம் பெயரும் போது தாம் எங்கு செல்கிறோம் எவ்வாறு செல்கிறோம் என்னும் குறிக்கோளுடன் பறந்து செல்வதில்லை. ஆயினும் மொனாச் இன வண்ணத்துப்பூச்சிகள் ஓரிடத்தில் இருந்து (பருவகால மாறுதல்களுக்கேற்ப) இடம் பெயரும் போது தாம் எங்கு போகிறோம் எங்கு திரும்பி வருவோம் என்ற சிந்தனையுடன் செயற்படுவதாக பூச்சியியல் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

கனடாவில் காணப்படும் இவ்வகை வண்ணத்துப்பூச்சிகள் சுமார் 4800 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மெக்சிக்கோவுக்கு பயணம் செய்வதாகவும் அதன் போது எவ்வாறேனும் தனது வழியை மறந்துவிடாது மீண்டும் மெக்சிக்கோவிலிருந்து கனடா செல்லும் இவ் வண்ணத்துப் பூச்சிகள் அங்கு முட்டையிட்டதும் இறந்து விடுவதாகவும் முட்டைகள் பல்கிப் பெருகி அவை மீண்டும் அங்கிருந்து மெக்சிக்கோவுக்குப் பயணமாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அங்கு அவை முட்டையிட்டு இறந்ததும் அம் முட்டைகள் மூலம் பெருகும் மேற்படி பூச்சிகள் மீண்டும் கனடாதிரும்பிவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பரம்பரை பரம்பரையாக இச் செயல் நடைபெறுவதாகவும் எனினும் தமது பாதையை அவை ஒரு போதும் தவறவிடு வதில்லை என்று தெரிவிக்கப் படுகின்றது.

தாம் செல்லும் இடத்தையும் காலத்தையும் அவை தவறவிடுவதில்லை என்றும் கூறப்படுகிறது.

இதன் மர்மம் என்னவென்று அறிய மெசசூட் பல்கலைக்கழகத்தின் பேராசியர் ஸ்ரிவன் ரெப்படி ஆய்வு ஒன்றை மேற்கொண்டார். அவரது தலைமையிலான விஞ்ஞானிகள் குழுவில் கீப்ரு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உணவு மற்றும் சுற்றுச் சூழல் சார்ந்த பேராசிரியர் ஓரன் நோறியும் இடம் பெற்றார். இக்குழுவின் ஆய்வுகளின் படி மொனாச் இன வண்ணத்துப்பூச்சி சம்பந்தமான தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

உலகில் எந்த உயிரினமும் உயிரியல் படி முறைக்கு ஏற்பவே செயற்படுகின்றன. அதற்கேற்ப எமது இதயத்துடிப்பு பசியேற்படுதல் பருவகாலத்துக்கேற்ப மரங்களில் இலையுதிர்தல், துளிர்த்தல் என்பன ஒரு கால நியதிக்கேற்பவே நடைபெறுகின்றன. அதேபோன்று இவ் வண்ணத்துப்பூச்சிகளின் மூளையும் இவ்வகையில் செயற்படுவதால் அவைகளின் நடவடிக்கைகளும் அமைகின்றன. அவற்றின் கண்களில் உள்ள ஒளியேற்றும் உறுப்பின் மூலம் அவை வழியை தெளிவாக்கிப் பயணிக்கின்றன.

இவ்வாறான உதவிகளால் அவை நீண்டதூரம் பயணிப்பதற்கு ஏதுவாகின்றன.

இவ் ஆய்வாளர்கள் மேலும் ஒருதகவலைத் தெரிவித்துள்ளனர். அதாவது இவற்றை உணவாகப் பிடித்து உண்ணும் பிராணிகளிலிருந்தும் இவை தப்புவதற்கு இவற்றுக்கு திறமையிருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.



நீண்ட தூரம் பயணிக்கும் தேனீக்கள், பாலைவன எறும்புகள், ஒரு சில பறவைகளிலும் இவ்வகை சிறப்புக்காணப்படுவதாகக் கூறப்படுகிறது. இவ்வகை வண்ணத்துப்பூச்சிகளையும் வேறு இன வண்ணத்துப்பூச்சிகளையும் இரவில் அடைத்து பகலில் திறந்து விடும்போது இவை பறந்து சென்றதும் ஏனையவை பறக்காததும் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்படி வண்ணத்துப்பூச்சிகளுக்கு பயணத்தின்போது வெளிச்சம் ஒரு தடையாக இருப்பதும் அறியப் படுகின்றது.

# ஓயாத அலைகள்–02

# கிளிநொச்சி மீட்பு நடந்ததெவ்வாறு?

கிளிநொச்சி இராணுவ முகாமை ஆக்கிரமித்திருந்த படைகளுக்கு அன்று பிரிகேடியர் உபாலி எதிரிசிங்க தலைமை வகித்திருந்த போதும் சத்ஜெய சமரின் மூன்று கட்டங்களுக்கும் வழிகாட்டிய இராணுவத்தளபதிகளில் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா, மேஜர் ஜெனரல் சிறீலால் வீரசூரியா, பிரிகேடியர் வசந்த பெரேரா ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழருக்குரிய நிலங்களை ஆக்கிரமிப்பதிலேயே இவர்கள் தீவிரமாகச் செயற்பட்டார்களேயானால் சொந்த மண்ணை இழந்தநிலையில் ஏதிலிகளாகிய தமது மக்களின் வாழ்விடங்களை மீட்கும் செயற்பாட்டுக்கு தமிழீழத் தேசியத்தலைவரும், தளபதிகளும் எந்தளவு தீவிரமாகச் செயற்பட்டிருப்பார்கள் என்பதை உணர முடியும் அதாவது புலிகள் அமைப்பின் ஒவ்வொரு தளபதிகளும் கிளிநொச்சி முகாமைத்


போராளி வீரமணி

தாக்குவதற்கான திட்டங்களை வகுத்தவண்ணமே இருந்துள்ளனர். அதற்காக விடுதலைப் புலிகளின் விசேட வேவுப்பிரிவுப் போராளிகள் மட்டுமல்லாது தேவைக்கேற்ப ஒவ்வொரு தளபதிகளும் தமது அணியின் வேவுப்போராளிகளை இம்முகாம் மீதான வேவு நடவடிக்கையில் ஈடுபடுத்தியும் வந்துள்ளனர். அந்த வகையில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியிலிருந்து அன்று வேவு செயற்பாட்டை மேற்கொண்டவரும் பின்னர் விசேட வேவுப்பிரிவோடிணைந்து வேவுச் செயற்பாட்டில் ஈடுபட்டவருமான போராளி வீரமணி தாம் எந்த நோக்கோடு முகாமுக்குள் நுழைந்தார்கள் என்பதையும் எதிரியின் நிலைகளை எவ்வாறு அவதானித்தார்கள் என்பதையும் தாம் இராணுவ முகாமுக்குள் வேவுச் செயற்பாட்டில் ஈடுபட்டபோது ஏற்பட்ட திகிலூட்டும் அனுபவங்களையும் இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

கிளிநொச்சி இராணுவ முகாமினுடைய வேவு நடவடிக்கையைச் செய்யுமாறு தள




பதி பால்ராஜ் அண்ணாவால் எங்களுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது.

எதிரியின் முகாமிற்கு வெளிப்பகுதியில்

## ஏழாம் ஆண்டு நிறைவில் ஓயாத அலைகள் –02

எங்களுடைய வேவு நடவடிக்கைகளைச் செய்த அந்தக் காலப்பகுதி எமது நடமாட்டத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாகவே இருந்தது. ஏனெனில் எதிரியின் அரண்களுக்கு முன்பாக அவனது படைகள் பதுங்கியிருந்து தாக்கி எமக்கு இழப்புகளை ஏற்படுத்தி வந்தார்கள். இதனால் முன்னணி வேவுத்தரவுகளைக் கூடத் திரட்ட முடியாதிருந்த காலப்பகுதியில் தான் உள்வேவு நடவடிக்கைகளைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டுமென்று எங்களுக்குக் கட்டளைப் பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்தக் காலப்பகுதியில் நாங்கள் சகல இடங்களிலும் எதிரியின் காவல் அரண்களை நெருங்கி நெருங்கி அவதானித்து வந்தோம். எந்தப் பகுதியில் எதிரியின் அவதானிப்பு குறைவாக இருக்கிறதோ அதனூடாக நாங்கள் உட்புகுவதற்கான வழியினை தேடிக்கொண்டிருந்தோம். அந்தக் காலப்பகுதியில் தான் எதிரியின் கம்பி வேலியிலிருந்து 100 மீற்றர் சில வேளைகளில் 200 மீற்றர் முன்பாக தனது அணியை காவலரண்களுக்கு முன்பாக நிலைப்படுத்தியிருந்தான். ஏனெனில் எமது அணிகளின் நடவடிக்கை எப்படியிருக்கின்றது என்பதை அறிந்து தமது முகாமை உசார்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கை. இதனால் நாங்கள் கடினமான முயற்சியெடுத்துதான் இந்த வேவு நடவடிக்கையை மேற்கொண்டோம்.

நாங்கள் உருத்திரபுரம் டி-7 பகுதியால் வந்து ஒரு வேவுநடவடிக்கை செய்தோம் இந்த நேரத்தில் வெளி வேவுகளை தீவிரப்படுத்தியிருந்தார் தளபதி பால்ராஜ் அண்ணா இதேநேரம் இன்னுமொரு அணியும் உள்வேவுக்காக ஒரு பாதையை பார்த்து உட்செல்ல முயற்சி செய்து கொண்டிருந்த வேளைதான் எதிரி அவதானிப்பு நிலையிலிருந்து அவதானித்து அந்த அணிக்கு பின்புறமாக தமது அணியை நகர்த்தி வந்து தாக்குதல் செய்துபோராளி ஒருவரின் தலையை வெட்டிக் கொண்டு போய்விட்டான். அதற்குப் பின்பு நாங்கள் அங்குசென்று தாக்குதலை நடத்தி அப்போராளியின் உடலை மீட்டுக்கொண்டு வந்தோம். இதனையடுத்து தளபதி பால்ராஜ் உள்நடவடிக்கைக்காக என்னோடு மூன்று பேர் கொண்ட ஒரு வேவு அணியையும் இன்னுமொரு அணியையும் தயார்படுத்தினார். என்னோடு இணைக்கப்பட்டவர்கள் மேஜர் சசிக்குமார், கருமபுலி மேஜர் நிதர்சன் ஆகியோர் அதே நேரத்தில் போராளி லூயினின் தலைமையிலான மற்றைய அணியில் மேஜர் பரணி, கப்டன் தமிழவன் ஆகியோர் இணைக்கப் பட்டிருந்தனர். இந்த இரண்டு அணிகளையும் உள்ளுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைத்தான் அவர் செய்திருந்தார். டி-7 பக்கமாக காவலரணை அடித்து எதிரிக்குச் உயிர் சேதத்தை ஏற்படுத்தும் அதேநேரத்தில், கொண்டு வரவேண்டும். அதேநேரத்தில் எங்களையும் உள்ளுக்கு அனுப்பவேண்டும் என்று முன்னணி வேவு அணிகளுக்குச் சொல்லப்பட்டிருந்தது. அந்தத் தாக்குதலுக்குப் போராளி ரஞ்சன் லாலா பொறுப்பாக இருந்தார். நாங்கள் இந்நடவடிக்கைக்காக ஒருநாள் பயிற்சி எடுத்தோம். காவலரண மீது தாக்குதல் நடத்தியவுடன் எங்களை உள்ளே அனுப்புவதுதான் திட்டம். இதிலே அந்தச் சண்டையிலும் ஒரு திட்டம் தரப்பட்டிருந்தது. ஒரு இடத்தில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து சென்றி பார்ப்பான் அந்த இடத்திற்கு குண்டு அடித்து சண்டையை ஆரம்பிப்பதுவே அத்திட்டம். இதற்காகத் தடைவெட்டும் போராளிகளுடன் நாங்கள் ஐந்து பேர் அமைதியாக நகர்ந்தோம். இரவு 12.45இற்கு சண்டையெனச் சொல்லப்பட்டிருந்தது. நாங்கள் தடைகளையெல்லாம் வெட்டி

நகர்ந்துகொண்டு போகும் சந்தர்ப்பத்தில் எதிரி வெளிச்சம் பாய்ச்சி நோட்டமிட்டுவிட்டு பன்றி என்று நினைத்து கலைக்கத் தொடங்கினான். பின்பு எங்களை இனங்கண்டு விட்டான். உடனே அந்த இடத்திலே சண்டை ஆரம்பமானது. உடனே நாங்கள் இரண்டு குண்டுகளை அடித்துவிட்டு மறைப்பு வேலிகளைப் பிரித்துக்கொண்டு பாதையை அகட்டி உள்நுழைந்தோம் நிறைய எறிகணைகள் வீழ்ந்து வெடித்துக்கொண்டிருந்தன. பரந்தன் பகுதியின் கிளிநொச்சி எல்லையிலிருந்து டிப்போவரை எனது அணியின் வேவுநடவடிக்கைக்குரிய பகுதி



யாக இருந்தது. எனக்குத் தரப்பட்டிருந்த வேலைத்திட்டம் எதிரியின் முகாம்கள் எந்தெந்த இடங்களில் இருக்கிறதென்பதை அவதானிக்கும் திட்டமாக இருந்தது. கிளிநொச்சி எங்களுக்கு ஒரு பரீட்சமான இடமாக இருந்தபோதும் முகாமுக்குள் எல்லாமே மாற்றப்பட்டிருந்தது. எதிரி எல்லாவற்றையும் முழுமையாக மாற்றி வைத்திருந்தான். அன்று இரவு நாங்கள் முகாமுக்குள் சென்று விடிந்துகொண்டு வரும் நேரத்தில் கனகபுரப் பகுதியில் ஒரு ஆலமரத்தின் கீழுள்ள பழைய ஐ பங்கர் ஒன்றுக்குள் மூன்றுபேரும் ஒழித்திருந்தோம். காலை 7.30 மணிக்கு அப்பகுதியால் இராணுவத்தினர் தேடுதலில் ஈடுபட்டனர். எமக்கு அருகாலும் சிலர் சென்றனர். ஆனால் எங்களைக் காணவில்லை. இராணுவத்தினர் இரவு சண்டை நடந்த இடத்திற்கு போய்க்கொண்டிருந்தனர். அதற்குப்பிறகு பகல் முழுவதும் அங்கேயே இருந்தோம்.

எதிரியின் அச்சுறுத்தல் அதிகமாக இருந்ததால் அதை பால்ராஜ் அண்ணை தமக்குத் தெரியப்படுத்தச் சொல்லியிருந்தார். அன்றிரவு 7.00மணிக்கு ஆலமரத்தில் ஏறி பால்ராஜ் அண்ணையோடு தொலைத் தொடர்பு கருவி மூலம் கதைத்துவிட்டு இறங்கி கனகபுரத்தை



நோக்கி நகர்ந்துகொண்டிருந்தோம். கனகபுரத்தில் இப்போது சங்கம் இருக்கின்ற இடத்திற்குப் பக்கத்தில் அன்று மினிமுகாம் ஒன்று இருந்தது. அங்கிருந்த மைதானம் ஆமிவிளையாடும் மைதானமாக இருந்தது. அதற்குப் பக்கத்தில் இருந்து மூன்றுபேரும் அந்த இடத்தை அவதானித்தோம். அப்போது மின்பிறப்பாக்கி இயங்கிக்கொண்டிருந்தது. பின்பு அங்கிருந்து திருநகர் வீதியால் நகர்ந்து முன்பிருந்த சந்தைப்பகுதியில் இருந்த காட்டுப் பகுதிக்குள் அன்று தங்கினோம். விடிந்தவுடன் பார்த்தபோது இராணுவத்தினது தடயங்கள் காணப்பட்டதோடு ஒரு வெளிப்பான பற்றையாகவும் இருந்தது. நாங்கள் அன்று பகல் முழுவதும் அதற்குள்ளேயே இருந்தோம். இருளானதும் அங்கிருந்து பால்சாலை வீதியால் வந்து பார்த்தோம். அப்பகுதியில் எதிரி இருக்கவில்லை. ஆனால் நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன. அதனால் இங்குதான் பிரதான முகாம் இருக்கவேண்டும் என்ற ஊகத்தில் இரவு பார்வை சாதனத்தால் பார்த்துக்கொண்டு போய் பிரதான வீதியில் ஏறிவிட்டோம். அங்கிருந்து நகர்ந்து சென்றால் முன்னை சுவையூற்று இருந்த இடத்திற்குப்போய் பின் பிரதான வீதியாலே நகர்ந்து வைத்தியசாலையை நோக்கிச் சென்றோம். அங்கு தேவாலயம் அமைந்திருந்த இடத்தில் எதிரியின் முட்கம்பி வேலிபோடப்பட்டிருந்தது. அந்த முட்கம்பி வேலியினைப் பிடித்துக்கொண்டுபோனோம். அங்கு புகையிரத வீதியோடுதான் பிரதான முகாமாக இருந்தது. அங்கு அவற்றை அவதானித்துக்கொண்டு புகையிரத வீதியால் நகர்ந்துசென்றோம். நாங்கள் எதிரியின் கமபி வேலியைவிட்டு விலகிச்சென்றால் எதிரியின் பதுங்கித்தாக்கும் அணிகளை சந்திக்க வேண்டிவரும் என்பதற்காக கம்பி வேலியைப் பிடித்துக்கொண்டே சென்றோம். அன்று பணக்காரத்தெரு என்று சொல்லப்பட்ட அந்தப்பகுதியில் முழுக்கட்டடங்களையும் எதிரி உடைத்திருந்தான் கம்பிவேலிகளின் முன்னால் நாய்களையும் கட்டி வைத்திருந்தான். நாய்கள் எங்களைப் பார்த்துக் குரைக்கத் தொடங்க எதிரி வெளிச்சம் பாய்ச்சிப்பார்த்துக்கொண்டிருந்தான். அதனால் நாங்கள் அமைதியாக குரோல் இழுத்துத் தவண்டு கால்களை மெதுவாக எடுத்துவைத்து தான் எங்களது நகர்வுகளை மேற்கொண்டோம். ஒவ்வொரு காவலரண்களும் எத்தனை மீற்றருக்கு ஒன்று இருக்கின்றதென்பதையும் குறித்துக்கொண்டுசென்றோம். இவ்வாறு ஒருபகுதியைப் பார்த்து முடித்துக்கொண்டு மீண்டும் சந்தைப்பகுதி பற்றைக்குள்ளேயே வந்துதங்கினோம். அன்று பகல் பால்ராஜ் அண்ணாவுடன் தொடர்பு கொணடு எடுத்த தகவல்களை கொடுத்தோம் அடுத்த நாள் அதேபோன்று மற்றப்பகுதியைப் பார்க்கத் தொடங்கினோம். அப்போது கரடிப்போக்கு வாய்க்கால் பகுதியெல்லாம் மறிக்கப் பட்டிருந்தது. அந்தப் பகுதியால் எல்லாம் உட்சென்று பார்த்துக்கொண்டு அதேபகுதி யால் வந்து அரைவாசிப் பகுதியைப் பார்த்து விட்டு மூன்றாம் நாள் சந்தைப் பகுதிக்குள் தங்கினோம். நாங்கள்

இ.சசிக்குமார்

முதல் நாள் பால் ராஜ் அண்ணாவோடு தொடர்பு கொண்டதை எதிரி தனது தொலைத் தொடர்புசாதனம் மூலம் கேட்டு நாங்கள் இருக்கும் பகுதியை அறிந்திருந்தான். அதனால் அன்று நாங்கள் இருந்த பற்றைப்பகுதியை சுற்றிவளைத்து இரண்டு டாங்கிகளையும் அப்பகுதிக்குத் தாக்குதல் நடத்தத்தயாராக வைத்துக் கொண்டு தேடுதல் செய்யத்தொடங்கினான். ஒரு பகுதியைத் தேடிமுடிக்க நாங்கள் அடுத்த பகுதிக்கு மாறினோம். இவ்வாறு [illegible] தடவைகள் நான்கு விதமாக தேடு[illegible] நடத்த... (08ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் பேச்சாளராக நலின் விதாரண நியமனம்

சிறிலங்கா இராணுவ ஊடகப் பணிப்பாளராகவும், ஊடகப் பேச்சாளராகவும் பிரிகேடியர் நலின் விதாரண பொறுப்பேற்றுள்ளார்.

இராணுவப் பேச்சாளராகப் பதவி வகித்த தயா இரத்நாயக்க ஆசிய பசுபிக் வலய புலனாய்வு மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான உயர் கல்வியைப் பெறுவதற்காக இன்று ஹவாய் செல்கிறார்.

பிரிகேடியர் தயா இரத்நாயக்கவுடன் மேலும் இராணுவ அதிகாரிகளான பிரிகேடியர் லெனார்ட் மார்க்கும், பிரிகேடியர் லால் பெரேராவும் ஹவாய் செல்கின்றனர். இவர்கள் அங்கு இரண்டு மாதங்கள் தங்கியிருப்பர்.

### விற்பனைக்கு

*பழமரநாற்றுக்கள்,மற்றும் மரக்கறிப் பயிர் நாற்றுக்கள் – (கத்தரி–மிளகாய், நல்லின தக்காளி) தென்னம்பிள்ளை–இலங்கள்–செவ்விளி– கைபிறிச் உள்ளூர் இலங்கள், மரமுந்திரிகை நாற்றுக்கள் – சூழல்பாதுகாப்பிற்கான– நாற்றுக்கள், தென்னிலங்கை பயிர்வகையான–கறுவா மற்றும் ஏனையபயிர்கள் – கமுகம்பிள்ளையும் – ஒட்டுப்பலா – போன்றவற்றையும் நல்லின முருங்கை நாற்றுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்.*

*முகவரி:– மு–கந்தசாமி,சுஜிதா பழமரமரக்கறி நாற்றுப்பண்ணை–261–புதிய புன்னைநீராவி விசுவமடு. (சி. 12848)*

## விற்பனை பிரதிநிதி (Sales Rep)


வன்னி மாவட்டத்திற்கான கிலினொல் பொருட்கள் விற்பனை செய்வதற்கு அனுபவம் உள்ள விற்பனை பிரதிநிதி தேவை

**தகைமை:-** (A/L)

அனுபவம்:- வன்னியில் வசிப்பவர் விரும்பத்தக்கது. (F.M.C.G) (அதிக விற்பனையிலுள்ள பொருட்கள்) 01.10.2005 இற்குமுன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-** விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யாழ்ப்பாணம். 111 கண்டி வீதி யாழ்ப்பாணம். (சி-12867)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர்**
**சுவாணி அகஸ்ரின்**
காசாளர் இளவேனில் வாணிபம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17-02-1944 | 22-09-2005 |

எமது வாணிபப் பணியாளர் சு. அகஸ்ரின் அவர்கள் சாவடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பணிப்பாளர்,**
**பொறுப்பாளர்கள்,**
**பணியாளர்கள்,**
**இளவேனில் வாணிபம்.**

(6737)

## வார இறுதி அடிப்படைஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

திகதி – 25.09.2005
இடம் – கிளி/ மத்திய கல்லூரி
நேரம் – பி.ப 2.00 மணி

பாடசாலையைவிட்டுவிலகியோர் ,உத்தியோகத்தர்களுக்கான வகுப்பு ஆரம்பம், பங்குபற்ற விரும்புவோர் நேரில் சமுகம் தரவும்.

இளையோர் செயற்பாட்டு நிறுவனம்,
கிளிநொச்சி. (சி.12850)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

*அமரர். மாயழகர்- மயாண்டி*
*கோணாவில்,யூனியன் குளம்.*

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 24-09-1938 | 25-08-2005 |

அக்காரயன் கமநல அபிவிருத்திச் சபையின் தலைவர் மாயாண்டி உதயகுமார் அவர்களின் தந்தையாரின் (அமரர் மாயழகர் மாயாண்டி) 31ஆம் நாளை 24-09-2005 இன்று நாம் நினைவு கூருவதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

*அக்கராயன் கமநல அபிவிருத்திச் சபை*
*உறுப்பினர்களும்,உத்தியோகத்தர்களும்.*

(6736)

## ஓயாத அலை 02...

நாங்களும் மாறி மாறிக்கொண்டேயிருந்தோம். இப்படியாக அவனது தேடுதல் முடிந்து டாங்கிகள் எல்லாம் புறப்படும் நேரத்தில் நாங்கள் ஒரு புற்றுக்குப் பின்னால் மறைந்திருந்தோம் அப்போது ஒரு ஆமி என்னுடைய முகத்துக்கு நேராக வந்து என்னைக் கண்டு விட்டான். நாங்கள் குண்டுகளை அடிக்கத் தயாராக வைத்திருந்தோம் சைனட்டையும் வாக்குள் வைத்தபடியே இருந்தோம். என்னுடைய முகத்தைப்பார்த்தவன் உடனே பயந்து கண்ணை மூடிவிட்டு திரும்பிச்சென்றுவிட்டான். நாங்கள் இருளும்வரை அங்குதான் இருந்தோம். ஆனால் எங்களைத்தேடி எதிரி வரவில்லை. இதே நேரத்தில் எங்களிடம் இருந்த உணவுகள் குடிநீர் எல்லாம் முடிந்துவிட்டது. அங்குள்ள கிணறுகளிலும் தண்ணீர் எடுக்க முடியாது. கிணற்றுப்படிகள் எல்லாம் உடைந்துபோயிருந்தன. அதனால் எம்மிடமிருந்த சிறிதளவு நீரை தண்ணீர் கான் மூடியில் எடுத்து தொண்டையை நனைத்துக்கொண்டுதான் இருந்தோம். மூன்றாம் நாள் எங்களது வேவுநடவடிக்கை முடிந்தது. இதனால் எங்களை திரும்பிவருமாறு கட்டளை கிடைத்தது. ஆனால், திரும்பி உள்ளேயிருந்து வெளியில் வரப்பாதையில்லை. எங்களைக் காவலரண் அடித்து உள்ளே அனுப்பியதால் பாதை எடுத்துத்தான் வெளியே வரவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. அதற்காக நாங்கள் நகர்ந்து டிப்போ பகுதி மத்திய கல்லூரிப்பகுதி எல்லாம் பார்த்தோம் எதிரி மண்ணரண்களின் உட்பகுதியில் முட்கம்பிகளை வலைபோன்று மண்ணோடு சேர்த்து அடித்திருந்தான். அவற்றுக்குள் கண்ணிவெடிகளையும் புதைத்திருந்தான். இந்தப்பகுதியால் வெளியால் செல்ல முடியாது. அன்றிரவு மரத்தில் ஏறி பால்ராஜ் அண்ணாவுடன் தொடர்புகொண்டேன். எங்களை கொம்படியால் வருமாறு அவர்கட்டளையிட்டார். அன்று அங்கேயே தங்க வேண்டியிருந்தது. அங்கு வற்றிய குளத்தின் ஒரு பகுதியில் நின்ற சேற்றுநீரை துணி வைத்து எடுத்து குடித்துவிட்டு வந்து வான்கரையின் ஒரு பகுதியில் ஒழித்துக்கொண்டோம். இதேவேளை றொட்டிக்கோ மைதானத்தில்இராணுவத்தினருக்கு பயிற்சி நடந்துகொண்டிருந்தது. அங்கு நடந்த சூட்டுப் பயிற்சியில் வந்த சன்னங்கள் எங்க ளைச் சுற்றி வீழ்ந்துகொண்டிருந்தன. பின்பு நாங்கள் இரவு நகர்ந்த தடயங்களைக் கண்டவுடன் தேடுதலை எதிரி மேற்கொள்ளத் தொடங்கினான். அப்போது நான் இருந்த இடத்தில் எறும்புகள் என்னை மொய்த்துக் கடித்துக்கொண்டிருந்தன.நான் அப்போது அசைய முடியாதிருந்தேன். ஒரு ஆமிவந்து எனது பாதத்துக்கு மேலே தனது கால்களை வைத்துக்கொண்டு சிறிது நேரம் நின்றான். பிறகு தொடர்ந்து தேடுதலை முடித்துக்கொண்டு போய்விட்டான்.

அடுத்தநாள் நாங்கள் நகர்ந்து உப்பளப் பகுதிக்குப்போய் அன்று பகல் அங்கேயே மறைந்திருந்தோம். அன்றிரவு தட்டுவன் கொட்டிப்பகுதியால் கடந்துசென்றோம். அன்று நேரம் போதாமையினால் ஆனையிறவின் பெருங்காட்டுப்பக்கமாய் போய் தங்கினோம். அப்போது எங்களுக்கு உணவோ நீரோ இருக்கவில்லை. பசிக்களையில் விழுந்த பனம் பழத்தை எடுத்து சாப்பிட்டுவிட்டு இருந்தோம். ஆனால் வெளியில் வரப்பாதை இருக்கவில்லை. அப்போது பால்ராஜ் அண்ணை எங்களோடு தொடர்புகொண்டு நீங்கள் எந்த இடத்திலாவது ஆமியின் காவலரண் மீது தாக்குதலை நடத்திக் கொண்டு வெளியே வாருங்கள். நாங்கள் அந்தப்பகுதியால் வந்து உங்களை மீட்போம் எனக் கூறினார். அதன்படி நகர்ந்துசென்றபோது எதிரி எங்களைக் கண்டு தாக்கத் தொடங்கி னான். நாங்களும் தாக்கத் தொடங்கினோம். பிறகு நாங்கள் ஓடி காட்டுக்குள் மறைந்து கொண்டோம். எங்களோடு வந்த போராளி சசிக்குமாரைக் காணவில்லை. நாங்கள் இரு வரும் அன்றுகாலை காட்டுக்குள் இருந்தபோது தேடுதல் நடத்திய ஆமி எங்களைக் கண்டு விட்டான். அதனால் நாங்கள் அவன் மீது தாக் கியவாறு அவனது அரண்களைத் தாண்டி கட்டைக்காட்டுப்பகுதியால் சென்று ஒரு நாவல் மரத்துக்குமேலே ஏறி இருந்தோம். ஆமி கீழால் சென்றான் ஆனால், எங்களைக் காண வில்லை. எங்களுக்கு நீர் கூட இல்லாததால் சோர்வடைந்துவிட்டோம். நடக்கவும் முடிய வில்லை. ஒருவாறாக அன்றிரவு ஆமியின் வேலியைக்கடந்து பூனைத்தொடுவாய்ப் பகுதியால் வந்து வெளியேறியதோடு மயங்கி விட்டோம். அப்பகுதி மக்கள் தான் எங்களைக் காப்பாற்றினார்கள். அடுத்த நாள் சுட்டதீவுப் பகுதியால் காணாமல் போன சசிக்குமாரும் வந்துசேர்ந்தார். (தொடரும்)



# வலிகாமம் தெற்குப் பிரதேச சபை சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

## கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:-** 03.10.2005 பி.ப. 02.00 மணிவரை

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப் படும் கடைசித்திகதி:-** 04.10.2005 ந.ப.12.00 மணிவரை

**கேள்வி திறந்து பார்க்கும் திகதி:-** 04.10.2005 பி.ப 03.00 மணிக்கு.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (வற் உட்பட) |
|---|---|---|
| 01. உழவு இயந்திர பாதுகாப்பு அறை அமைத்தல் | 7500.00 | 575.00. |
| 02.உடுவில் பொது நூலக புனரமைப்பு (தொடர் வேலை). | 7500.00 | 575.00 |
| 03 சுன்னாகம் தில்லைக்கலட்டி வீதித் திருத்தம். | 10000.00 | 575.00 |
| 04 சுன்னாகம் செல்லத்துரை வீதித் திருத்தம். | 15000.00 | 575.00 |
| 05 ஏழாலை கேசாவத்தை நாச்சியபுரம் வீதித் திருத்தம். | 7000.00 | 575.00 |
| 06 இணுவில் சின்னத்தம்பிப்புலவர் வீதித் திருத்தம். | 15000.00 | 575.00 |
| 07 தாவடி ஆரம்ப சுகாதார நிலைய வீதித் திருத்தம். | 3000.00 | 575.00 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் "இக்ராட்" நிறுவனத்தில் தரம் எம்" 9" அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதியை "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும், அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம் யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல்வேண்டும். மேலதிக விபரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்..

*வலிகாமம் தெற்கு*
*பிரதேசசபை,*
*சுன்னாகம்.*
*2005.09.20,*

(சி-12906)

***திருமதி.ச.சொக்கலிங்கம்,***
*செயலாளர்,*
*வலிகாமம் தெற்கு பிரதேசசபை,*
*சுன்னாகம்.*

# உரிமையாளர் கவனத்திற்கு

விசுவமடு பிரதேசத்தில் கட்டாக்காலியாகத் திரிந்து பயிரழிவை ஏற்படுத்திய கால்நடைகள் பிடிக்கப்பட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் இயலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. எனவே 30.09.2005 இற்குமுன் இவற்றின் உரிமையாளர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

### கால்நடைகள் விபரம்

1) கறுப்பு – நாகு–து. 662
2) கருவெள்ளை –
3) கருவெள்ளை – நாம்பன்–க. வி
4) கறுப்பு – நாகு–V.P
5) நாம்பன் கன்று – சிவப்பு–J.S
6) சிவப்பு – நாகு–V.P
7) கறுப்பு – நாகு–662
8) வெள்ளை – பசு–9
9) சிவப்பு – பசு–ஷா
10) கறுப்பு – பசு–ச
11) மா வெள்ளை – பசு–ச. 662
12) வெள்ளை – பசுA.K

தகவல்:–
இணைப்பாளர்,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
விசுவமடுப் பிரதேசம்.

(சி.12869)

# கண்ணீர் வணக்கம்

## அமரர். மாசிலாமணி மணிமேகலாதேவி

தமிழீழ வைப்பகப் பணியாளர் திரு. மா. சுதர்ஷன் அவர்களின் தாயார் திருமதி. மாசிலாமணி மணிமேகலாதேவி அவர்கள் 23.09.2005அன்று யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்தியதை யிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின் றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்.
தமிழீழ வைப்பகம்.

(சி.12907)



(சி-12902)

## இந்தியக் கிரிக்கெட் சபை

# நிர்வாகிகள் தேர்தலை நடத்த உயர் நீதிமன்றம் தடை விதிப்பு

இந்திய கிரிக்கெட் சபையின் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்தையும், நிர்வாகிகள் தேர்தலையும் நடத்த கொல்கத்தா உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக கிரிக்கெட் சபையின் முன் னாள் தலைவர் ஜக்மோகன் டால்மியா பிரிவினர் தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை முடியும் வரை இந்தத் தடை நீடிக்குமென்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்தியக் கிரிக்கெட் சபையின் தற்போதைய தலைவரான றன்பீம் சிங் மகேந்திரா மற்றும் கர்நாடக கிரிக்கெட் சங்கம் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் இந்தத் தடையை விதித்துள்ளது.

கிரிக்கெட் வாரிய நிர்வாகிகளின் தேர்தலை மேற்பார்வையிட கொல்கத்தா உயர் நீதிமன் றம் நேற்று முன்தினம் கூடுதலாக இரண்டு பார்வையாளர்களை நியமித்ததை எதிர்த்து நீதிமன்றத்தில் மேன் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



# இந்திய அணிக்குத் தலைமை தாங்க கங்குலிக்குத் தகுதியில்லை

## இந்திய அணி பயிற்றுவிப்பாளர் சப்பல்

இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவராக நீடிக்க உடல் ரீதியிலும் மன ரீதியிலும் சௌரவ் கங்குலிக்குத் தகுதியில்லை என்று இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல் தெரிவித்துள்ளார்.

இந்திய வீரர்களிடையே பிளவை அவர் ஏற்படுத்துவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக மின்னஞ்சல் மூலமாக ஆறு பக்கக் கடிதம் ஒன்றை கிரிக்கெட் சபைத் தலைவருக்கு அணியின் பயிற்றுநர் அனுப்பியுள்ளார்.

2007ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கோப்பை போட்டியில் இந்தியா முன்னோக்கிச் செல்வதற்கு கங்குலியின் எண்ணங்கள், அணுகு முறைகள் உகந்ததாக இல்லையென்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்திய பயிற்சியாளரின் கடிதம் கிடைத்ததை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் உறுதி செய்தார். அதேசமயம் இது ரகசியமான விடயம் என்பதால் அதிலுள்ள விடயங்களைத் தெரிவிக்க முடியாதென்றும் மகேந்திரா தெரிவித்துள்ளார்.

ஆனால், மின்னஞ்சல் மூலம் பயிற்சியாளர் அனுப்பிய கடிதம் கொல்கத்தாவில் பெங்காளிப் பத்திரிகைகளுக்கு எவ்வாறு சென்றதென்பது புதிராக உள்ளதென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

# லாகூர் குண்டு வெடிப்பால் போட்டி இடமாற்றப்படமாட்டாது

அண்மையில் பாகிஸ்தான் லாகூரில் குண்டுவெடிப்புக்கள் நிகழ்ந்தபோதும் திட்டமிட்டவாறு பாகிஸ்தான் - இலங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் பங்குபற்றும் ஒரு நாள் போட்டி நடைபெறும் என்றும் அது வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்படாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இங்கு பாகிஸ்தான் அவுஸ்திரேலிய ஏ அணிகள் லாகூரில் வேறொரு இடத்தில் போட்டிகளில் கலந்து கொண்டு வருவதாகவும் ஆயினும் பலத்த மழை காரணமாக அப்போட்டிகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறேனும், தனது அணியின் போட்டிகளை மாற்றுவதற்கு எவ்வித திட்டமும் கிடையாது என இங்கிலாந்து கிரிக்கெட்டின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அத்துடன் அந்நாட்டு வெளியுறவு அதிகாரிகளுடனும் இது பற்றி பேசி வருவதாகவும் தெரிவித்துள்ளார். அதைவிட அவுஸ்திரேலிய அதிகாரிகளைச் சந்தித்து அங்குள்ள பாதுகாப்பு நிலை பற்றி பேசி உறுதிப்படுத்தியிருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முகாமையாளர் சகிர்கான் குறிப்பிட்டுள்ளார். இங்கிலாந்து அணி வரும் ஒக்ரோபர் 26 முதல் பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவிருக்கின்றது. பாதுகாப்புக் காரணங்களுக்காக கராச்சியில் போட்டிகளில் பங்கேற்க இங்கிலாந்து கிரிக்கெட் சபை மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# நீடித்து வரும் முதுகுப்பிடிப்பு பிளிண்டொப் கவலை



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான அன்ரூ பிளிண்டொப்புக்குத் தொடர்ந்து இருந்து வரும் முதுகுப்பிடிப்புக் காரணமாக அவர் போட்டிகளில் இருந்து சற்று விலகியிருக்க வேண்டி ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் அண்மையில் நடைபெற்று முடிந்த ஆஷஸ் தொடருக்கு முன்னரே முதுகு காயத்தினால் அவதிப்பட்டு வந்துள்ளார்.

சுமார் எட்டு வருட காலமாக தனக்கு இந்தப் பிரச்சினை இருப்பதாகத் தெரிவித்துள்ள பிளிண்டொப் இது தீவிரமாகிவிடுமோ என அஞ்சுவதாகக் கூறியுள்ளார். எவ்வாறேனும் கடந்த 26 டெஸ்ட் போட்டிகளில் அவர் திறமையுடன் பந்து வீசி வருகின்றார்.

இதனால், வேகப்பந்து முறையை மாற்றி சுழற்பந்து வீச்சு முறைக்கு மாறுவதாயினும் அது வெற்றியளிக்கவில்லை என்பதை அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

# நடுவர்களின் தீர்ப்புக் குறித்து சிம்பாப்வே பயிற்றுநர் அதிருப்தி

இந்தியாவுக்கு எதிரான இரு டெஸ்ட் போட்டிகளிலும் சிம்பாப்வே அணி தோல்வி கண்ட நிலையில் போட்டி நடுவர்களின் சில தீர்ப்புக்களில் சிம்பாப்வே பயிற்றுநர் கெவின் கரன் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்சில் சிம்பாப்வே துடுப்பாட்ட வீரர்களுக்கு ஆட்டமிழப்பு வழங்கியமை முறையற்றதாக அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் சிறிய அணிகள் இவ்வாறு பல முறை தீர்ப்புக்குள்ளாகியிருப்பதாகவும், அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி பத்து விக்கெட்டுக்களால் வென்றபோதும் இரண்டாவது இனிங்சில் ஹமில்டன் மசகட்சா, அன்டி பிலிக்நட் இருவரினதும் துடுப்பாட்டம் பிரகாசமானதாக இருந்ததாகவும், அவர்களின் பந்து வீச்சும் துடுப்பாட்டமும் முன்னேற்றம் கண்டு வருவதாகவும் இந்திய அணித் தலைவர் கங்குலி தெரிவித்ததுடன் பாராட்டையும் தெரிவித்துள்ளார். அத்துடன் அவ்வணியின் அன்டி பிளவர் கிரான்ட் பிளவர் ஹேபிறைஸ் ஆகியோரின் இழப்பை ஈடுசெய்வார்கள் என்றும் கங்குலி தெரிவித்துள்ளார்.

## ஜனசக்தி கிண்ணத்துக்கான

# இறுதிப் போட்டியில் மனோகரா பொமேர்ஸ் அணிகள்

ஜனசக்தி சுழல் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட ஜனசக்தி சுழல் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதியாட்டத்திற்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகமும் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழகமும் தகுதி பெற்றுள்ளன.

இதேவேளை, நடைபெறவுள்ள விசேட காட்சிப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும், இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

# கரணவாய் ம.வி.கழகத்திடம் சென்மேரிஸ் அணி தோல்வி

(யாழ்ப்பாணம்)

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதல் சுற்று ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஐந்து நிமிடத்தில் சென்மேரிஸ் அணிக்கு கோல் பெறும் வாய்ப்பு கிடைத்தபோதும் கிடைத்த சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்தாதபடியால் கோல் பெறும் வாய்ப்பை இழந்தனர். சென்மேரிஸ் அணியில் பல முன்னணி வீரர்கள் இருக்கின்றபோதும் அவர்களின் கோல் பெறும் முயற்சியை கரணவாய் மத்திய அணி வீரர்களின் தடுப்பாட்டம் தடுத்து நிறுத்தியது.

இந்நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைய வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்கான உதை வழங்கப்பட்டது. இதில் கரணவாய் மத்திய விளையாட்டுக்கழகம் 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (கீ)

# திலீபன் நினைவு நிகழ்வுகளை முன்னிட்டு ஆண், பெண்களுக்கான வீதியோட்டப் போட்டி

தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வை முன்னிட்டு வட்டக்கச்சிப் பிரதேசத்தில் மாபெரும் வீதியோட்டப் போட்டி நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி வீதியோட்டப் போட்டி நிகழ்வில் ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் கலந்து கொண்டனர்.

பூங்காவனச் சந்தியிலிருந்து ஆரம்பித்த ஆண்களுக்கான வீதியோட்டப் போட்டியில் வட்டக்கச்சி மாவீரர் மண்டபம் வரையிலான 13 கிலோ மீற்றர் தூர ஓட்டப் போட்டியில் கி. ஜிவதரன் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இதில் இரண்டாம் இடத்தை சி. தீபனும், மூன்றாம் இடத்தை அன்ரன் யூட்டும் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்காக நடைபெற்ற மூன்றாம் வாய்க்கால் சந்தியிலிருந்து வட்டக்கச்சி மாவீரர் மண்டபம் வரையிலான ஏழு கிலோ மீற்றர் தூர வீதி யோட்டப் போட்டியில் முதலாம் இடத்தை ச. நிஷாவும், இரண்டாம் இடத்தை சி. துசிதாவும், மூன்றாம் இடத்தை அ. றாதிகாவும் பெற்றுக் கொண்டனர். (12)

# ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க கலைமதி கிண்ணத்தை சுவீகரித்தது

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

நேற்று முன்தினம் இரவு 9.00 மணிக்கு கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மத்திய விளையாட்டுக்கழகமும், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதியன.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் எதிர்த்து விளையாடிய மத்திய விளையாட்டுக்கழகத்தை 3-1 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றிகொண்டது.

இவ்வாட்டத்தில் இந்து இளைஞர் அணி முதல் சுற்றை 25:21 என்ற புள்ளியிலும், இரண்டாம் சுற்றை மத்திய விளையாட்டுக்கழகம் 25: 17 என்ற புள்ளியிலும் மூன்றாம், நான்காம் சுற்றுக்களை இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 25:21, 25:19 என்ற புள்ளி அடிப்படையிலும் வெற்றி பெற்றன.

இறுதியாட்டத்தில் சிறந்த விளையாட்டு வீரராக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எம். வினோஜன் தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டிக்கு நடுவர்களாக ஸ்ரீமுருகதாஸ், காந்தன், அப்புத்துரை ஆகியோர் கடமையாற்றினர். வெற்றிபெற்ற அணி வீரர்களுக்கு தங்கப் பதக்கமும் விசேட பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (கீ)

## மென்பந்து துடுப்பாட்டப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறையின் ஆதரவுடன் நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மேஜர் துளசி ஞாபகார்த்த மென்பந்து துடுப்பாட்டப் போட்டி இன்று நடைபெறும் என மேற்படி கழகம் தெரிவித்துள்ளது.

உதயநகர் கிழக்கு நியூஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் இன்று காலை ஆரம்பமாகவுள்ள இப்போட்டியின் இறுதிப் போட்டி நாளை பிற்பகல் நடைபெறும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.




# நீர்வேலி சவாரித் திடலில் மாட்டு வண்டிச் சவாரி

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு மத்திய சனசமூக நிலையம் நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி சவாரித்திடலில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அதிசிறந்த காளைகள் பங்குகொள்ளவுள்ள இந்தப் போட்டியில் வெற்றிபெறும் போட்டியாளர்களுக்கு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்படவுள்ளது. (கீ)


# இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

இளவாலை கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில் இளவாலை வெண்புறா விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாவட்ட ரீதியான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு விளையாட்டுக்கழகத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

வெண்புறா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளன. (கீ)

## சிந்தனைக்கு



விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 24.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# அனைவரும் ஒருவரே!

சிங்கள அரசியல் கட்சிகள் யாவும் இன்று அம்பலமாகி அம்மணமாகி நிற்கின்றன. இனப்பிரச்சினை விடயத்தில் இவர்கள் போட்ட, போடக்கூடிய வேடங்கள் யாவற்றையும் களைந்துவிட்டு பௌத்த – சிங்களத்தலைவர்களாக தம்மைக் காட்டிக்கொள்வதில், வெளிப்படுத்திக் கொள்வதில் முனைப்புடன் அக்கட்சிகளின் தலைவர்கள் உள்ளனர்.

ஆனால் இது தற்போதைய சிங்களத்தலைவர்களுக்கு மட்டும் உரியதானதல்ல. அத்தோடு இது இலங்கையின் அரசியல் வரலாற்றுக்கும் புதியதொன்றல்ல. எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவும் அதைத் தான் செய்தார். சிறிமாவோவும் அதைத் தான் செய்தார். அதேபோன்று ஜே.ஆர் ஜெயவர்த்தனாவும் அதைத்தான் செய்தார். பெயர் குறிப்பிடப்படவில்லை என்பதற்காக மற்றைய தலைவர்கள் எவரும் விதிவிலக்கானவர்களும் அல்ல.

அவ்வாறு செய்தது ஏன்? ஆட்சி அதிகாரத்திற்கான போட்டி, ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைக்கவேண்டியதான நெருக்கடிநிலை என வரும்போதெல்லாம் தமது சுயரூபத்தை வெளிப்படுத்தி விடுகின்றமையே காரணமாகும். அதாவது இலங்கையில் உள்ள சிறுபான்மை இனங்களின் உரிமைகளை மறுதலித்து பௌத்த-சிங்களப் பேரினவாத சக்திகளின் பாதுகாவலர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்வதற்கானதே ஆகும். தேவையேற்படும் பட்சத்தில் சிறுபான்மை இனங்கள் மீது தாம் ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடவும் தயங்கப்போவதில்லை என்பதையே.

இந்த வகையில் தற்போது மீண்டும் அதிகாரத்திற்கான போட்டி உச்சத்தை அடைந்துள்ள நிலையில் ஒவ்வொரு சிங்களத் தலைவரும், கட்சியினரும் தமது சுயரூபத்தை வெளிக்காட்டியுள்ளனர். இதில் வலதுசாரித்தலைவர்கள்; கட்சிகள்; இடதுசாரித் தலைவர்கள்; கட்சிகள்; மிதவாதத்தலைவர்கள்; கட்சிகள்; தீவிரவாதத்தலைவர்கள்; கட்சிகள்; என்ற வேறுபாடே கிடையாது. சுருக்கமாகக் கூறப்போனால் சிறுபான்மையினர் தொடர்பான நிலைப்பாட்டில் தமக்குக் கருத்து முரண்பாடோ வேறு முரண்பாடோ இல்லையென்பதையே இவர்கள் ஒவ்வொரு தேர்தலின் போதும் தெளிவாக வெளிக்காட்டி வருகின்றனர்.

முப்பது வருட அரசியல் வாழ்வைக் கொண்டதாகப் பேசிக்கொள்ளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி விடுதல் வேண்டும் என்பதற்காக தமது கட்சியின் கொள்கைகளை உதறிவிட்டு ஜே.வி.பியுடனும், ஜாதிகஹெல உறுமயவுடனும் தேர்தல் கூட்டு ஒன்றைச் செய்துள்ளார்.

இதில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு இனப்பிரச்சினை தொடர்பாகவோ, வேறு விடயங்கள் தொடர்பாகவோ எத்தகைய கொள்கை கோட்பாடுகள் உள்ளன என்பது வேறு விடயம். ஆனால் தற்போது ஆட்சியின் தலைவராக இருக்கும் சனாதிபதி சந்திகா குமாரதுங்கவின் நிலைப்பாட்டிற்கும் மாறாக ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் மகிந்த ராஜபக்ஷ கூட்டுச்சேர்ந்தமையானது எந்தவிதக் கொள்கை கோட்பாட்டிற்கும் மேற்பட்டதாக பௌத்த-சிங்களப் பேரினவாதத்தின் ஆதரவு தேவை என்பதன் வெளிப்பாடே.

அடுத்ததாகத் தம்மை இடதுசாரிகளெனக் கூறிக்கொள்ளும் ஜே.வி.பியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டைவைத்துக் கொள்ளும் இடதுசாரிகளும் கூட வேறுபாடு அற்றவர்களே. இன்று ஜே.வி.பியினரை நாம் மட்டுமல்ல சர்வதேச சமூகமே ஒரு தீவிர வலதுசாரி அடிப்படைவாதக் கட்சியாகவே நோக்குகின்றன. இந்நிலையில் அக்கட்சி குறித்து இங்கு விபரிப்பதற்கு எதுவுமில்லை.


இவர்களை விட தம்மை ஏதோஒரு வகையில் கம்யூனிஸ்டுக்கட்சி என்ற பெயருடன் இணைத்துக் கொண்டுள்ள இடதுசாரிகள் தீவிர வலதுசாரித்தனத்தை வெளிப்படுத்தும் ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமய போன்ற கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்துள்ள மகிந்த ராஜபக்ஷவுடன் தம்மையும் இணைத்துக்கொண்டுள்ளது தான் ஒருபுறத்தில் அபத்தமானது. இன்னொரு புறத்தில் கேவலமானது. இவர்களும் "தோசை, வடை அப்பிட்ட எப்பா" என ஊர்வலம் போனவர்கள்தான். ஆயினும் இவர்களும் பதவி சுகத்திற்காக நிர்வாணமாகத் தயாராகியமை தான் அசிங்கமானது.

இவர்களில் ஒருவரைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். அவர் தான் வாசுதேவ நாணயக்கார. அவர் தனிப்பட்ட ரீதியில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கப்போகின்றாராம். ஒரு கட்சியின் கூட்டணியின் பெயரில், ஆதரவில் போட்டியிடும் ஒரு வேட்பாளருக்குத் தனிப்பட்ட முறையில் ஆதரவு அளிப்பது என்பது சிறிலங்காவில் தான் நடைபெறுவதாகவுள்ளது. அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளருடன் ஜே.வி.பி. தனிப்பட்டமுறையில் உடன்பாடு செய்துள்ளதாம். ஜே.வி.பி. ஜாதிக ஹெல உறுமயவுடன் கூட்டுச்சேர்ந்துள்ள மகிந்த ராஜபக்ஷவை வாசுதேவநாணயக்கார தனிப்பட்ட ரீதியில் ஆதரிக்கின்றாராம்.

இந்த நிலையில் தற்போது தனது உண்மை முகத்தை சிறியதொரு சம்பவத்தின் மூலம் வெளிக்காட்டியிருப்பவர் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகும். அவசரகாலச்சட்டம் குறித்த விவாதத்தில் ஐதே.கட்சியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினரான தி.மகேஸ்வரன் பேசுவதற்கு நேரம் ஒதுக்காததன் மூலம் இதனை அவர் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது தமிழர் மீதான ஒடுக்குமுறை குறித்து மகேஸ்வரன் பேசுவதால் சிங்களவர்களின் வாக்குகள் குறைவடைந்துவிடும் என்பதற்காக தமிழ் மக்கள் அவசரகாலச்சட்டத்தால் எதிர்நோக்கும் நெருக்கடிகளைக்கூட வெளிக்கொண்டுவர அவரும், அவரது கட்சியினரும் ஏன் சமாதானநாயகரான லொக்குபண்டாரகூட அனுமதிக்கத் தயாராக இருக்கவில்லை.

இந்த வகையில் சிங்கள அரசியல் கட்சிகளும் சரி சிங்களத் தலைவர்களும் சரி இனப்பிரச்சினை விடயத்தில் சிந்தனையிலும், செயலிலும் வேறுபட்டவர்கள் அல்ல. ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்காக இவர்கள் ஒடுக்குமுறைகளைத் தீவிரப்படுத்தும் நிலையில் உள்ளனரே ஒழிய பிரச்சினைத் தீர்விற்காக சவால்களை எதிர்கொள்ளவோ நாட்டிற்காக அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ளவோ தயாராக இல்லை. இந்த வகையில் சிறுபான்மையினரைப் பொறுத்து இவர்கள் அனைவரும் ஒருவரே.

# விண்ணில் மின்னும் தியாகச் சுடரே திலீபா!



தியாகத்தின் சின்னமே நம் திலீபா – நின்
அகிம்சைவழிப் போரின் ஆரம்ப நாட்களை
ஈரொன்பதாண்டுதனில் உணர்வுடனே
மீட்டியிங்கே பார்க்கின்றோம்!

அன்று
நல்லூர் வீதியிலே நீர்கூட அருந்தாமல்
நீ புரிந்த யாகமதில் நீ உதிர்ந்து போனாலும்
உன் கனவிங்கே நனவாகிப் போனதடா

தியாக வேள்வியிலே – நீ
தந்துபோன – உன்
பூவுடல், பொன்னுடல், புகழுடல் – எம்
கண்ணீர் வெள்ளமதில் நனைந்து
நீராடிச் சென்றதையா!.

மக்கள் புரட்சி,
வெடிக்கட்டும் என்றாய் – இதோ
உன் ஆணைதனை நெஞ்சில் சுமந்திங்கே
பொங்குகின்றோம் தமிழீழத் தனியரசுக்காய்
ஈழத் தமிழராய் உன் உறவுகளிங்கே – எம்
ஈழச்சுடரே இப்போது பாரடா உன் ஈழ தேசத்தை

விடிவுதரும் கோரிக்கைகள்
ஐந்தை வைத்து நீ கிடந்தாய் பசி
அகிம்சையின் வழிவந்த பாரத நாடது – உன்
தியாகப் பற்றின் தீரம் புரியாது
பாராமுகமாய் வஞ்சனை புரிந்தது – அன்று
பாதிப் பயணத்தில் நீ பிரிந்தாய் – இன்று
பயண முடிவில் உன் பங்கை நினைந்துருகுகின்றோம்!

தமிழீழ விடிவுதனை
விண்மீன்களாய் வானில் நின்று
மாவீரத் தோளருடன் கண்ணுற்று மகிழுவேனென்றாய் – இதோ
பார்த்தீபா...
ஈழதேசம் விடியும் நேரம்
உற்றுப்பாரடா உன் தங்கத் தமிழீழத்தை

அ. மதன்

# இனப்பிரச்சினை தொடர்பாக திரைப்படமெடுக்கும் இயக்குநர்களுக்கு படையினர் அச்சுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக திரைப்படம் தயாரித்த திரைப்பட இயக்குநர்களுக்கு சிறிலங்கா படைத்தரப்பு மற்றும் ஊடகத் துறையினரால் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலுக்கு சுதந்திர ஊடக அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

"போருக்கு எதிராக திரைப்படம் எடுத்த அசோக ஹந்தகம, பிரசன்ன விதானகே, சுதத் மகாதிவுல்வெவ மற்றும் விமுக்தி ஜயசுந்தர ஆகியோரை செப்ரெம்பர் 14 ஆம் திகதி ஆங்கில ஊடகம் ஒன்று மிகக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளது.

வெளிநாட்டு நிதியுதவியுடன் திரைப்படம் எடுக்கப்பட்டிருப்பதாகவும், இது ஒரு புதிய பயங்கரவாதம் என்றும் அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நான்கு இயக்குநர்களுமே தங்களது படைப்புக்களுக்காக சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டவர்கள். இவர்களில் இரண்டு இயக்குநர்களை அண்மையில் சந்தித்த இராணுவ மூத்த அதிகாரிகள் மிக மோசமான முறையில் அவர்களை நடத்தி, விமர்சித்துள்ளனர். இச்சந்திப்புக்களையடுத்து அவர்கள் மிகவும் அச்சத்துடன் உள்ளனர்.

இனப்பிரச்சினை தொடர் கருத்துக்களை வெளியிடுகிற க துச் சுதந்திரம், படைப்பாளிகளுக் உண்டு. ஊடகத்துறை உள்ளிட் அனைத்துத் தரப்பினரும் அந் திரைப்பட இயக்குநர்களின் கருத்துச் சுதந்திரத்தை மதிக்க வேண்டும். இந்தக் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்க அரசாங்கம் உரிய நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று சுதந்திர ஊடக அமைப்பு வெளி யிட்டுள்ள கண்டன அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

# சேதுக்கால்வாய் திட்டத்தை ஆய்வுசெய்ய சிறிலங்கா வல்லுநர்குழு அமைப்பு

(கொழும்பு)

இந்தியக் கூட்டரசின் சேதுக் கால்வாய் திட்டம் குறித்து ஆய்வு செய்ய வல்லுநர் குழுவை சிறிலங்கா அரசு அமைத்துள்ளது.

சிறிலங்கா அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளர் நிமல் சிறிபால டி சில்வா கூறி...

அவர் மேலும் கூறிய... வது:

சேதுக்கால்வாய் திட்...த்தால் சிறிலங்கா அரசு உண்மையிலேயே மிகவும் கவலை கொள்கிறது.

நரோட்ட மற்றும் கடல் வெப்ப நிலை ஆகியவை பாதிக்கப்படுவதுடன் கடல்சார் உயிரின வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இது மீனவர்களுக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்றார் அவர்.

சேதுக்கால்வாய் திட்டத்திற்கு பொதுவாக எதிர்ப்புத் தெரிவித்துள்ள சிறிலங்கா அரசு, வல்லுநர் குழுவினர் எந்த அம்சத்தின் கீழ் தங்களது ஆய்வுகளை மேற்கொள்ளப் போகிறார்கள் என்பது உள்ளிட்ட விவரங்களைத் தெரியப்படுத்தவில்லை.

550 மில்லியன் டொலர் அளவிலான இந்தியாவின் சேதுக்கால்வாய் திட்டத்தின் மூலம் 167 மீற்றர் ஆழத்துக்கு கடல் ஆழப்படுத்தப்படவுள்ளது. இக்கால்வாய் 2008 ஆம் ஆண்டு முதல் செயற்படத் தொடங்கும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் எண்மர் போட்டியிடத் தீர்மானம்

(கொழும்பு)

இம்முறை சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை எட்டு வேட்பாளர்கள் முன்வந்துள்ளனர். மூன்று வேட்பாளர்கள் தற்போது வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய சமாஜவாதி கட்சியின் சார்பில் சிறிதுங்க ஜயசூரிய, சிறிலங்கா தேசிய முன்னணிக் கட்சி சார்பில் விமல் கீகியனகே, புதிய இடதுசாரி முன்னணியின் சார்பில் சமில் ஜயந்த, சமாஜவாதி சாமனத்தா கட்சியின் சார்பில் விஜே டயஸ், சனநாயக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் அருள்பிரகாசம், ஆகியோர் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளனர். மற்றும் முஸ்லிம் தேசிய அமைப்பின் சார்பில் ஒருவர் போட்டியிடுவார். அவரின் பெயர் இதுவரை குறிப்பிடப்படவில்லை.

# பிரதமர் மீதான விசாரணை தொடர்கின்றது

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஹெல்பின் அம்பாந்தோட்டை நிதி தொடர்பிலான குற்றப்புலனாய்வு துறையினரின் விசாரணைகள் தொடர்கின்றன. இதனடிப்படையில் குற்றப்புலனாய்வு துறையினர், குற்றச்சாட்டு தொடர்பில் சம்பந்தப்பட்டுள்ள வங்கிகளிடமிருந்து கணக்குகளை கோரியுள்ளனர். அண்மையில் இதற்கான அனு...யை கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வுத் துறையினர் ...றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(32)

# தமிழரின் சுயநிர்ணய உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும்

*தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து*

இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க கோருவதைத் தவிர தங்களுக்கு வேறு வழியில்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சமாதான முன்னெடுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட நாட்களிலிருந்து நடைபெற்ற அரசியல் சம்பவங்களைப் பார்க்கும் போது சிறிலங்கா அரசாங்கத்திற்கு தமிழ் மக்களையும் ஒன்றிணைத்து கூட்டாக நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற உறுதியோ வல்லமையோ இல்லை என்பது தெளிவு.

அத்தோடு தமிழர்கள் அவசிய மனிதாபிமான தேவைகள் என்றாலும் சரி, சமாதான முன்னெடுப்புக்கான பரந்து பட்ட நடவடிக்கைகள் என்றாலும் சரி அவற்றில் கரிசனை செலுத்துவதற்கு சிறிலங்கா அரசுக்கு உறுதியும் கிடையாது. வல்லமையும் இல்லை.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு முன்வராமை சிறிலங்கா அரசு தமிழ் மக்களின் மனஉறுதியை உதாசீனம் செய்வதாகவே இருக்கின்றது.

இந்த நிலைமை இன்று தமிழ் மக்களை பெரும் அவல நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கின்றது.

இந்தத் தேசியப் பிரச்சினைக்கு நீடித்து நிலைக்கக்கூடிய சட்ட பூர்வமான நியாயமானதான அபிலாசைகளை நிறைவு செய்யக் கூடிய, திருப்திப்படுத்தக் கூடிய சுமூகமான தீர்வொன்றை தமிழ் மக்கள் இன்று எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

எனவே இத்தகைய சுமூகமான தீர்வொன்று கிடைப்பதை உறுதிப் படுத்துவதற்கு சர்வதேச சமூகம் தங்களது நல்லெண்ணத்தைப் பயன் படுத்த வேண்டும் என்று தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

சிறிலங்கா அரசு தொடர்ந்தும் சுமூகமான தீர்வொன்றைத் தராமல் இழுத்தடித்து உதாசீனம் செய்யுமானால் தங்களது சுய நிர்ணய போராட்டத்திற்கு பூரண அங்கீகாரத்தை தருமாறு சர்வதேச சமூகத்தை கோருவதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு மாற்று வழி கிடையாது. என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வங்கிக் கணக்கை ஆராய உத்தரவிட்ட நீதிபதி இடமாற்றம்!


ஹெல்பிங் அம்பாந்தோட்டை என்ற மகிந்த ராஜபக்ஷமோசடி செய்ததாகக் கூறப்படும் நிதியம் தொடர்பான வங்கிக் கணக்குகளைப் பரிசீலிக்க உத்தரவிட்ட கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிபதி சரத்டி கருணாரட்ண கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்நிதியம் தொடர்பான வங்கிக் கணக்குகள் சிறிலங்கா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வரும் நிலையில் இவ் இடமாற்றம் தேவையற்றதெனக் கூறியுள்ள கொழும்பு இரத்துச் செய்யுமாறு பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவை கோரியுள்ளது. (32)

## முஸ்லிம் காங்கிரஸ் புதன் முடிவு செய்யும்

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்ற முடிவை முஸ் லிம் காங்கிரஸ் எதிர் வரும் புதன் கிழமை அறிவிக்கவுள்ளது. இதற்கான முடிவை எடுக்கும் அதிகாரத்தை நேற்றிரவு கூடிய முஸ்லிம் உயர் பீடம் அதன் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கு வழங்கியுள்ளது. இதனடிப்படையில் அவர் வரும் புதன் கிழமை முடிவை அறிவிப்பார் எனத் தெரிய வருகின்றது. (32)



## தியாகி திலீபன் நினைவாக சிறப்பு மருத்துவ முகாம்

தியாக தீபம் திலீபன் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு சிறப்பு மருத்துவ முகாம் நாளை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை மன் வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

பற்சிகிச்சை,பொது மருத்துவம், தோல் மருத்துவம்,குழந்தை மருத்துவம் என்பவற்றுடன் சுகாதாரமும், உடல்நலம் பேணும் கண்காட்சியும் நடைபெறவிருக்கிறது. இந்நிகழ்விற்கு அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## உலக்கையால் அடித்து பெண் கொலை: பல இலட்சம் ரூபா பொருட்கள் கொள்ளை!

*–கொக்குவிலில் கோரச் சம்பவம்–*

(யாழ்ப்பாணம்)

வீட்டிலிருந்த பெண்மணியை உலக்கையால் அடித்துக் கொன்றுவிட்டு வீட்டிலிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்படுள்ளன.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள பொற்பதிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இதில் அவ்வீட்டின் உரிமையாளரான திருமதி- சுப்பிரமணியம் புனிதவதி (வயது-61) என்ற பெண்மணியே இவ்வாறு அடித்துக் கொல்லப்பட்டவராவார்.

பிரஸ்தாப பெண்மணி வீட்டில் தனியே இருந்த சமயம் பார்த்து வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் அவரை அடித்துக் கொன்றுவிட்டு வீட்டினுள் இருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகப் பொலிசார் கூறுகின்றனர். உயிரிழந்த பெண்மணி இரு பிள்ளைகளின் தாய் என்றும் தெரிவிக்கப்படுகிறது. . சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (33)

### முகமாலையில்...

தொடர்பாக பல்லைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.பல்லைக்கழக மாணவர்கள் குழு ஒன்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சகிதம் முகமாலைக்குச் சென்று அங்கு கைது செய்யப்பட்ட மாணவனை விடுவிக்கக் கோரி படையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் கடுமையான வாக்குவதங்களில் குழப்பமடைந்த படையினர் சம்பவ இடத்தில் குவிந்து மாணவர்களது எதிர்ப்பைச் சமாளிக்கத் தயாராகினர்.

இதனால் முகமாலை இராணுவச் சோதனைச் சாவடி பெரும் பதற்றத்துள் மூழ்கியது. இதனிடையே கைது செய்யப்பட்ட மாணவனை படையினரது பிடியில் இருந்து மீட்ட ஏனைய மாணவர்கள் அவரிடமிருந்து பெறப்பட்ட வாக்கு மூலப் பத்திரத்தையும் மீளப் பெற முனைந்த போதும் படையினர் வழங்க மறுத்துவிட்டனர்.

இந்தச்சம்பவத்தால் காலை 7.45 தொடக்கம் நண்பகல் வரை முகமாலைச் சோதனைச் சாவடி பெரும் பதற்றத் தில் மூழ்கியது. முகமாலையூடான பொதுமக்களது போக்குவரத்தும் தடைப்பட்டது. (33,27)

### சனாதிபதி...

வரும் நடவடிக்கைகளில் இருந்து சற்று விலகி இருப்பதற்காகவும் அமெரிக்காவில் இருந்து உடனடியாக சிறிலங்கா திரும்புவதனைத் தவிர்த்து அடுத்தவார ஆரம்பத்தில் பெரும்பாலும் 27 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே பல கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

### பல்கலை...

அவரது கைப்பையினுள் புலி இலச்சினை பொறிக்கப்பட்ட தகடு ஒன்றை பலவந்தமாகத் திணித்து அவரைப் புலி உறுப்பினர் எனக் கூறி வீண் வன்முறையைத் தூண்ட படையினர் முனைந்துள்ளனர்.

யுத்தநிறுத்த காலத்தில் படையினர் மேற்கொண்ட இந்நடவடிக்கை அப்பட்டமான ஓர்யுத்தநிறுத்த மீறலாகவே உள்ளது.

மக்களை வீண்வம்புக்கு இழுத்து வன்முறைகளைத் தூண்டி விடும் படையினரது நடவடிக்கைகளின் ஓர் அம்சமாகவே இந் நடவடிக்கையும் உள்ளது என்றும் அவர் விசனம் தெரிவித்துள்ளார். (33)

### சுயநிர்ணய...

சர்வதேச சமூகத்திற்கும் மிகத்தெளிவாகக் காட்ட வேண்டிய ஒருகாலம் வந்து விட்டது. பொறுத்தது போதும் என நாங்கள் பொங்கியெழும் நேரம் வந்து விட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

### பொங்குதமிழ்...

கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, ஒலி பெருக்கிகள் மூலம் எழுச்சிக் கீதங்களும் ஒலிக்கவிடப்படவுள்ளன.

அத்துடன் பிரதேசவாரியாக யாழ். பல்லைக்கழக மாணவர்கள் மக்களை எழுச்சிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (33)

### தென்னிலங்கை...

இது தமிழீழ விடுதலைப் புலிகளும் தற்போது கூட சிறிலங்கா அரசுடன் உடனடிப் பேச்சுக்களுக்குத் தாங்கள் தயார் என்று அறிவித்துள்ளனர். பாதுகாப்புக்களைக் கருத்திற் கொண்டு தங்களது நிர்வாகப் பகுதியிலோ அல்லது நடுநிலைமை நாடு ஒன்றிலோ இப்பேச்சுக்கள் நடாத்தப்பட வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை சிறிலங்கா அரசு களைய வேண்டும் என்று இணைத்தலைமை நாடுகள் கூறியிருப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின்பாதுகாப்புக் குறித்த கவலையை அந்நாடுகள் புரிந்துகொண்டிருக்கக் கூடும்.

நடுநிலைமை நாடு ஒன்றில் பேச்சுக்களை நடாத்துவதன் மூலம் விடுதலைப் புலிகளுக்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைத்து விடுமோ என்ற சந்தேகத்துடன் சிறிலங்கா அரசு இருப்பது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைச் சிதைப்பதாகும். அப்படியான நிலையில் அமைதிப் பேச்சுக்கள் மீதோ அரசியல் வழி தீர்விலோ எப்படி நம்பிக்கை வரும்?

அமைதிப் பேச்சுக்கள் தொடர்பான இத்தகைய குழப்பங்கள் நீடிக்கின்ற நிலையில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் ஆயுட்காலம் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலை என்ன என்பது அடிப்படையான விடயம்.

வடக்குக் கிழக்கில் உள்ள துணைப்படை ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து விடுவதால் மட்டுமே வன்முறைகள் நின்றுவிடப் போவதில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தத்தை சிறிலங்கா அரசானது வளர்த் தெடுக்கும் வரையில் இருதரப்பினரும எதிர் எதிரே பேச்சு மேசையில் அமர்ந்து பேசினாலும் எந்தத் தீர்வையும் எட்டிவிட முடியாது.

இருதரப்பினரும் அடுத்தமாதம் நோர்வே விசேட தூதுவர் ட்ரொண்ட்புறூவ் ஹொப்டேயுடன் பேச்சுக்களை நடாத்தவுள்ளனர். கருணா உள்ளிட்ட ஆயுதக் குழுக்களுக்கு சிறிலங்கா இராணுவம் ஆதரவளிக்கவில்லை என்று கொழும்பு வன்மையாக மறுப்புத் தெரிவித்தாலும் அக்குழுவினருக்கு அவர்கள் இன்னும் இடம் அளித்து வருகிறார்கள். சிறிலங்கா இராணுவத்தினரின் இம்மறைமுக ஆதரவு தொடர்பான விவாதத்தை விரும்பாத நிலையில்தான் பேச்சுக்களுக்கான இடம் குறித்த குழப்பத்தை சிறிலங்கா அரசு உருவாக்கி வருகிறது.

ஆகையால் சர்வதேச சமூகமானது [illegible]லங்கா அரச கட்டுப்பாட்டுப் [illegible]திகளில் உள்ள துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று பாரிய அழுத்தம் கொடுத்து முழு அளவில் அதைச் செயற்படுத்த வைக்க வேண்டும்.

சர்வதேச சமூகத்தின் சமாதான முன்னெடுப்புக்களை மீறி சிறிலங்கா அரசியல் நிகழ்வுகள் சென்று கொண்டிருக்கின்றன. சிங்களத் தீவிரவாதிகள் தென்னிலங்கையின் பிரதான அரசியல் சக்திகளாக உருவெடுத்துள்ளனர். இலங்கையின் சிறுபான்மை சமூகத்தினரும் சர்வதேச சமூகத்தினரும் அமைதி முயற்சிகளின் எதிர்நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இதனிடையே தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்த ஒப்பந்த காலத்தில் தங்களது ஆயுத பலத்தை அதிகரித்துக்கொண்டதாகத் தீவிரவாத இயக்கமான ஜாதிக ஹெல உறுமய மீண்டும் கூறியுள்ளது.தென்னிலங்கை அரசியல் வாதிகள் விடுதலைப் புலிகளின் பலம் குறித்து தவறாக மதிப்பிட்டு வைத்துள்ளனர். போரை நடாத்தினால் வெற்றி பெறுவோம் என்று வாதிட்டு வருகின்றனர். இராணுவ வழித்தீர்வுக்கான முயற்சிகளையே மீண்டும் சிறிலங்கா மேற்கொள்வது நிச்சயமாக நிகழக் கூடியதாக இருக்கும் என்பதை இவை காட்டுகிறது என்று அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## சாவு அறிவித்தல்

பிறப்பு 17 - 05 - 1924



இறப்பு 21 - 09 - 2005

### சுப்பிரமணியம் அரியபுத்திரன்

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும்,ஸ்கந்தபுரம் இல--240ஐ நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற காணி உதவி உத்தியோகத்தர் சுப்பிரமணியம் அரியபுத்திரன் அவர்கள் 21.09.2005 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (24.09.2005) இன்று பிற்பகல் 2 மணிக்கு நடை பெறும் என்பதை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நி. முகவரி, ஸ்கந்தபுரம்,
இல–240,
கிளிநொச்சி.

(சி.12908)

தகவல்.
குடும்பத்தினர்.

இப் பத்திரிகை ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.